ISSN 1703-9185

# ஆத்மஜோதி

**Arthmajothy**

October - December 2012

நந்தன வருட
ஐப்பசி - மார்கழி 2012
இலவச வெளியீடு
3000 பிரதிகள்





அண்மையில் பவளவிழாக் கண்ட சைவப் பெரியார்கள்

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க



**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***



**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

**Homelife/Future Realty Inc., Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

## வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ

**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**






NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.





**HONEST AND FRIENDLY SERVICE**
**CALL: MR. P. SINGARAJ**
**416-993-8443**
**905-471-3058**




உ

சிவமயம்

# ஆத்மஜோதி

தாபிதம்: 1948

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185



கனடா மலர் 13:
இதழ் 4
கர வருடம்
ஐப்பசி - மார்கழி
திரு. ஆண்டு -2041
ஆங்கில ஆண்டு 2012



**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்



**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| எங்குமுள்ள பிள்ளையார் | 4 |
| திருமுறையில் வாழ்வியல் | 5 |
| சாயி அவதாரமும் பயன்பாடுகளும் | 12 |
| அடைக்கலம் அவனியின் தாரகம் | 15 |
| சைவ சித்தாந்த வளர்ச்சியில் ஈழத்து அறிஞர்களின் பணிகள் | 19 |
| சோதிச் சுவாமி பிரகாஸ் மயானந்தா | 28 |
| நாவலர் வழியில் நின்று சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றியவர் | 31 |
| திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் | 34 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 39 |
| அமரத்துவச் செய்திகள் | 42 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |

ஆசிரியர் தலையங்கம்

# அகவை 75ல் அறிஞர் இருவர்

அதிபர் சிவநெறிச்செல்வர் தி. விசுவலிங்கம் அவர்கள் இவ்வாண்டு டிசம்பர் 16ஆம் திகதியும் சித்தாந்தக் கலாநிதி திரு. க. கணேசலிங்கம் அவர்கள் டிசம்பர் 20ஆம் திகதியும் அகவை எழுபத்தைந்தை அடைந்துள்ளனர்

அதிபர் தி. விசுவலிங்கம் அவர்கள் காரைநகரைப் பிறப்பிடமாகக்கொண்டவர். பி.எஸ்ஸி பட்டம் பெற்றுச் சிறந்த விஞ்ஞான ஆசிரியராக இலங்கையிலும் நைஜீரியாவிலும் பணியாற்றியவர். பல பாடநூல்களையும் வெளியிட்டுள்ளார். இப்பொழுது குடும்பத்துடன் கனடாவில் வாழ்ந்துவரும் இவர் தாம் அமைத்த திருவள்ளுவர் கல்விக் கழகத்தின் தலைவராகவும் சைவசித்தாந்த மன்றத் தலைவராகவும் மன்றம் நடத்தும் சமயகுரவர் பாடசாலையின் அதிபராகவும் ஆசிரியராகவும் மன்றம் வெளியிடும் அன்புநெறி இதழின் நிருவாக ஆசிரியராகவும் தொண்டாற்றி வருகின்றார்.

சிறந்த கல்விமானும் ஒழுக்கசீலருமாகிய இவரது பவளவிழா கடந்த 22-12-2012 சனிக்கிழமை மிசிசாகா நகரில் வெகு சிறப்பாக நடந்தேறியிருக்கிறது.

சித்தாந்தரத்தினம் திரு. க. கணேசலிங்கம் யாழ்ப்பாணம் குப்பிழானைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இலங்கை மின்சாரப் பொறியியல்த்துறை திணைக்களத்தில் வடமாநிலப் பகுதிக்குப் பொறுப்பான இயக்குநராகப் பதவி வகித்தவர். ஓய்வுபெற்றபின் தமிழ்நாடு சென்று சைவசித்தாந்தம் கற்றுப் பட்டங்கள் பெற்றவர். தான்பெற்ற அறிவை உலகம் எங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டுவருகின்றார். சைவ சமயத்தை எளிதாக விளக்கித் தமிழிலும் ஆங்கிலத்திலும் சில நூல்களையும் சைவ உலகத்துக்குத் தந்திருக்கின்றார். இலண்டன் மெய்கண்டார் ஆதீனப் புலவராகவும் உலகச் சைவப்பேரவையின் ஆலோசகராகவும் தொண்டாற்றி வருகின்றார்.

---

தாமரை இலையில் உருண்டோடும் பனித்துளி போன்றது மனித வாழ்க்கை.

இவர்கள் இருவரும் கனடாவில் உள்ள ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள். திரு. விசுவலிங்கம் அவர்களின் கல்வித்துறை, சமயம் மற்றும் தமிழ்ப் பணிகளைப் பாராட்டி இந்துசமயப் பேரவை 2004ஆம் ஆண்டு நாவலர் விழாவில் அவரைக் கௌரவித்திருக்கின்றது. அதன் பெருவிழாக்களிலும் மகாநாடுகளிலும் திரு. விசுவலிங்கம் அவர்களும் அவரது துணைவியார் திருமதி வடிவழகாம்பாள் அவர்களும் கலந்துகொண்டு உரைகள் நிகழ்த்தியிருக்கின்றனர்.

அவர்களைப்போலவே திரு. க. கணேசலிங்கம் அவர்களும் இந்து சமயப் பேரவை வருடாவருடம் நடத்தும் திருமுறை மகாநாடுகள் பலவற்றில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரைகள் நிகழ்த்தியிருக்கின்றார். இந்து சமயப் பேரவையும் உலகச் சைவப் பேரவையின் கனடாக் கிளையும் இணைந்து நடத்திய சமயப் பட்டறைகளில் பாடங்களும் நடத்தியவர்.

இவர்கள் இருவரும் சமயப் பணிக்குத் தங்களை அர்ப்பணித்துள்ள பெருமக்கள். இவர்கள் சீரோடும் சிறப்போடும் வாழ எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கி வாழ்த்துகின்றோம்.

- வி. கந்தவனம்

---

## கிருபானந்தவாரியாரின் அருள் மொழிகள்

- வறியவர்களுக்கு வாரி வழங்கி அவர்கள் இன்புறுவதைக் கண்டு நாம் இன்புற வேண்டும்.

- ஞானிகளைப் பழித்தவன் மறுபிறப்பில் பித்தனாகப் பிறப்பான்

- ஏழையை ஓங்கி அடித்தவன் மறுபிறப்பில் கை ஒடிந்து முடமாவான்.

- நீங்கள் செய்த பாவங்களை நீங்கள் பிறரிடம் கூறுவதால் பாவம் குறையும்.

---

உலகில் கடமையும் அன்பும் ஒன்று சேரும் பொழுதுதான் அந்த அன்பு வேர் ஊன்றி நிற்கும்.

உ

## எங்குமுள்ள பிள்ளையார்

### முள்ளியவளை காட்டாவிநாயகர்

காற்றினிலே கமழ்பூக்கள் வாசம் சேர்க்கும்
காகங்குயில் முட்டையையும் கட்டிக் காக்கும்
பாற்றலைப்பாம் பெலிகளுடன் பழகிச் சூழும்
பலாபாலை மிகையாகப் பழுத்து வீழும்
சேற்றுவயல் நாற்றுகளைச் செழிக்கச் செய்யும்
சீராரும் முள்ளிநகர்ப் பதியைச் சேர்ந்து
வேற்றுமையில் ஒற்றுமையை வளர்க்குங் காட்டா
விநாயகரை வேண்டிவினை வீழ்த்து வாமே. (113)

### தண்ணீரூற்று - ஊற்றங்கரை சித்திவிநாயகர்

மூலாதி முழுப்பொருளின் மூத்த பிள்ளை
மூலமலக் கயமுகனை முடித்த பிள்ளை
பாலாவி முகில்வண்ணப் பண்ணை நல்லூர்
பண்டார வன்னியனின் பழைய நெல்லூர்
சாலீர முள்ளிநகர்த் தண்ணீ ரூற்றில்
சன்மார்க்க நெறிநிற்குஞ் சான்றோ ராலே
மேலான ஊற்றங்கரை விளங்குஞ் சித்தி
விநாயகரை வேண்டினறம் விளங்கு மாமே. (114)

### முள்ளியவளை - கணுக்கேணி கற்பகப் பிள்ளையார்

படராத கொடியோங்கிப் படர வைப்பார்
பழுக்காத காய்முற்றிப் பழுக்க வைப்பார்
படியாத பசுநாடிப் படிக்க வைப்பார்
பாடாத குயில்பாடிக் களிக்க வைப்பார்
விடியாத பொழுதினையும் விடிய வைப்பார்
வேங்கைகளை வரவேற்று விருந்து வைப்பார்
கடிதான தவமுள்ளி நகரைக் காக்கும்
கணுக்கேணிக் கற்பகப் பிள்ளை யாரே. (115)

வி. கந்தவனம்

# திருமுறைகளில் வாழ்வியல்

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்

**தமிழ் பக்தி மொழி:**

மொழியியல் ஆராய்ச்சியாளர்கள் தமிழ்மொழியைப் பக்தி மொழி என்று கூறுகின்றார்கள். உலகில் தோன்றிய தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்றாகிய தமிழ்மொழி காலவெள்ளத்தால் அழியாது இன்றும் வாழும் மொழியாகப் பலகோடிக்கணக்கான மக்களால் பேசப்படும் மொழியாக இளமை மிக்க மொழியாகத் திகழ்கிறது. களங்கமிலாத பக்தியினால் நால்வர் பெருமக்களும் பன்னிரு ஆழ்வார்களும் அருளிய பாடல்களே தமிழ்மொழியின் இளமைக்கு காரணமாக அமைந்துள்ளது என்பதைச் சுப்பிரமணிய யோகியார்

**"களங்கமிலாப் பக்தியினால் பன்னிருவர் நால்வர்**
**கற்கண்டு சொற்கோவை கவிமாலை புனைந்து"**
**எனத் தனது பாடலில் குறிப்பிடுகின்றார்.**

**பக்திஇயக்கம்**

கலியுகத்தில் இறையருளைப் பெறுவதற்கு பக்தி மார்க்கமே மிகச்சிறந்த வழி என நாரத மகரிஷி தனது பக்தி சூத்திரத்தில் குறிப்பிட்டுள்ளார். "பக்தி வலையில் படுவோன் காண்க" என்றே தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. பிறசமயப் பிடியிலிருந்து நமது சமயத்தைப் பாதுகாப்பதற்கு நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி மார்க்கத்தையே துணையாகப் பற்றினார்கள். பக்தி நெறியை இவர்கள் மக்கள் இயக்கமாக மாற்றினார்கள் தமிழ் நாட்டில் தோன்றிய பக்தி இயக்கமே, வடஇந்தியாவில் பக்தி இயக்கம் வளர்வதற்குத் திசைகாட்டியாகத் திகழ்ந்தது.

"பக்தி என்பது தமிழகத்தில் பிறந்தது, மராத்திய மாநிலத்தில் வடஇந்தியாவில் வளர்ந்து பருவம் எய்தியது. குஜராத்தில் முதுமை எய்தியது என்று பத்மபுராணத்தில் ஒரு செய்தி கூறுகின்றது.

"பக்தி நெறி என்பது தமிழகத்திலிருந்து உலகிற்கே ஒளி கூட்டுவதாக உள்ளது. அது தன்னலம் பற்றியது அன்று அது உலகிடை வாழும் அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்தும்

---

**உயர்ந்த எண்ணங்களை உடையோர் ஒருநாளும் தனித்தவராகார்.**

தனி நெறி. பிறர் நலத்திற்காகத் தொண்டு புரிதலைக் தலையாய கடமையாகக் கொண்டது.

உண்மைச் சமயத்தின் உயிர்நாடியாகத் திகழ்வது பக்தி ஆகும். இறைவனைப் பற்றிக் கொள்ள வேண்டுமென்று மனித மனம் முயல்கின்ற முயற்சியே பக்தி எனப்படும். ஆன்மாவிற்கும் இறைவனுக்கும் உள்ள உறவை ஒன்றை மட்டும் விரும்பி நிற்பதே உண்மையான பக்தனின் நிலையாகும். தன்னை மறந்து தற்போதமில்லாமல் ஒரு செயலைச் செய்தால் அது உள்நின்று தூண்டும் இறையருளால் செய்யப்படும் செயலாகவே அமையும். அடியார்களின் செயல்கள் அனைத்தும் ஆண்டவனின் செயல்கள் என்பதைச் "சித்தம் சிவமாக்கி செய்தனவே தவமாக்கும் அத்தன்" என மணிவாசகரின் திருவாசகமும் குறிப்பிடுகிறது.

**திருமுறைகளின் சிறப்பு**

திருநெறிய தமிழ் என்று போற்றப்படும் பன்னிரு திருமுறைகளும் மானுட சமுதாயத்தின் வாழ்வியல் நெறிகளை வளப்படுத்தும் நோக்கில் அருளாளர்களால் அருளப்பெற்ற அருளியற் கொடைகளாகும். சங்க காலம் முதல் சோழர் காலம் வரை தோற்றம் பெற்ற தெய்வீகப் பாடல்களின் தொகுப்பாகவே பன்னிரு திருமுறைகள் காணப்படுகின்றன. பன்னிரு திருமுறைகளில் இறைவனால் அருளப்பெற்ற பாடலும் உண்டு. இறையருள் பெற்ற அருளாளர்களால் பாடப்பெற்ற பாடல்களும் உண்டு.

பன்னிரு திருமுறைகளும் சிவனையே முழுமுதற் கடவுளாகக் கூறுகின்றன.

"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"

என அப்பர் பெருமானும், "சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் வேறில்லை" எனத் தவயோகி திருமூலநாயனாரும் சிவ பரத்துவத்தை தங்கள் பாடல்களில் போற்றியுள்ளார்கள்.

தேவாரம் வேதசாரமாக இருப்பதைப் போன்று திருவாசகம் உபநிடத சாரமாகவும் திருமந்திரம் ஆகமசாரமாகவும் காணப்படுகின்றன. திருமறைக்காட்டில் வேதங்களால் பூட்டப்பட்டு இருந்த கதவை அப்பர் சுவாமிகள் தேவாரம் பாடியே திறக்கச்

---

**பகைமையால் எப்போதும் அழிவுதான் அன்பு ஒருபோதும் மடிவதில்லை.**

செய்தார் என அவருடைய வரலாற்றிலே கூறப்பட்டுள்ளது. வேதமந்திரத்திற்கு உள்ள சக்தி திருமுறைக்கும் உண்டு என்பதை இந்தச் சம்பவம் எடுத்து விளக்குகிறது. தமிழிலே இறைவனுக்குச் செய்யக்கூடிய அர்ச்சனை மலர்களாக இருப்பது திருமுறைப் பாடல்கள் என்பதை "அர்ச்சனை பாட்டேயாகும்" எனப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது.

மக்கள் குலம் மாண்போடு வாழ வழிவகுப்பது திருமுறைகள். பிணி நீங்கி வாழவும், வினை நீங்கி வாழவும் இவை வழிகாட்டுகின்றன. நவகோள்களும் தீவினையும் துன்பத்தைத் தருகின்றன. அத்துன்பம் நீங்கி வாழ இறைவனை மலர் தூவி திருமுறைகளை ஓதி வழிபட வேண்டும். திருமுறைப் பாடல்கள் பொருட் செறிவும், சொல்நயமும், நடையழகும் கொண்டவை. இறைவன் உள்நின்று உணர்த்த "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற பெருநோக்கோடு அருளாளர்கள் அருளிய அருட் கொடையே திருமுறைச்செல்வம். "எனதுரை தனதுரையாக" என்று ஞானசம்பந்தர் கூறுவது போல சீவனுக்குள்ளே சிவமணம் பூத்த ஞானச் செல்வர்கள் வழங்கிய மந்திர சொரூபமான மலர்களாகவே திருமுறைகள் திகழ்கின்றன.

திருமுறைகளை ஓதும்போதும் ஓதி உணரும்போதும் உணர்ந்து உருகும்போதும், உருகிக் கனியும் போதும், கனிந்து பக்தி நெறியிற் படரும் போதும், படர்ந்து இறையருள் மாண்பினை எண்ணும் போதும் அருள்நெறியில் ஒன்றாகிப் போகும் தெய்வீக நிலை ஏற்படுகிறது.

### திருமுறைகளின் சமுதாய நோக்கு:

சமய இலக்கியங்களாகிய பன்னிரு திருமுறைகள் தனி மனித முன்னேற்றத்தை வலியுறுத்துகின்றன. ஆனால் சமுதாய முன்னேற்றமே சமய இலக்கியங்களின் குறிக்கோளாகக் காணப்படுகின்றன. தனி மனிதனை முன்னேற்றி அவன் மூலமாக சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்பதையே சமய இலக்கியம் வலியுறுத்தும். இந்த அடிப்படையினை பன்னிரு திருமுறைகளும் தமது மெய்க் கொள்கையாக அமைத்துக் கொண்டிருக்கின்றன.

உடல், மனம், சித்தம், ஆன்மா, இறைவன் ஆகிய ஐந்து உறுப்புக்களைக் கொண்ட ஒரு கூட்டுச் சமுதாயமே மனிதன்.

---

**உண்மை அன்பை வாய்ச்சொல் வெளிப்படுத்தாது. சேவைதான் வெளிப்படுத்தும்.**

இவைகளை முறைப்படி உணர்ந்து முன்னேற்றினால் இறைவன் தலைமைப் பொருளாகி நிற்பான். இறைவனின் தலைமையைப் புறக்கணித்துவிட்டு மனிதர்களில் பலர் உடல், மனம் போன்றவற்றையே முதன்மைப்படுத்தி வாழ்ந்து வருகின்றார்கள். இந்நிலையை மாற்றி இறைவனை முதன்மைப்படுத்தி இறையருள் பெற்ற அருளாளர்களால் பாடப்பெற்ற அனுபூதி வாசகங்களாகிய திருமுறைகளை உணர்ந்து ஓதினால் மனிதன் அருள் மனிதனாகி தெய்வீக நிலைக்கு உயர்ந்து விடுவான்.

தனிமனிதனிடத்தில் வளமான வாழ்வியலுக்கான மூலக்கூறுகள் இருப்பது உண்மையேயானாலும் அவற்றைச் செயற்படுத்துவதற்குரிய சூழ்நிலையும் அவசியம் தேவைப்படு கின்றது. இத்தகைய சூழ்நிலையை உருவாக்கித்தருவதற்கு வழிகாட்டும் திசைகாட்டியாக பன்னிரு திருமுறைகள் அமைந்திருக்கின்றன.

தனிமனித வாழ்க்கையில் உந்துகோலாக இருப்பவை முறையே உலகியல் அறிவு, அறஇயல் விளக்கம், அறிவியல் மாண்பு, ஆன்ம இயல் ஞானம், அருளியற் பேறு ஆகிய படிமுறைகள். இப்படி முறைகளில் தனி மனிதன் உயர்ந்து சிறப்பதற்கும் அவன் வளர்ச்சிக்கும் சமுதாயப் பின்னணி தேவை. அடியவர்கள் ஆத்மஞானம் உடையவர்களுடன் கூட இருந்தால் தான் அருளியற்பேற்றினை அடைய முடியும் என்பதை "அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" எனத் தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது.

பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றி அமைத்த தேவார முதலிகளால், தமிழகத்தின் சிற்றூர்களில், தெருக்களில் ஊரின் மையமாக விளங்கிய திருக்கோயில்களில் எழுந்த பாடல்களே இன்னிசை மலர்கள் என்று போற்றப்படும் தேவாரப் பாடல்கள் ஆகும். இப்பாடல்களிலே தேவார முதலிகளின் பக்தி மட்டும் மலரவில்லை. அவர்களது நம்பிக்கைகள் மலர்ந்திருக் கின்றன. அக்கால மக்களின் பழக்க வழக்கங்கள், சமூக அமைப்பு, சமுதாய நாகரிகம், ஒற்றுமை நிரம்பிய வாழ்வு, முதலிய யாவும் அவற்றைச் சார்ந்து மலர்ந்து நிற்கின்றன.

**உலகியல் வாழ்க்கை - வரப்பிரசாதம்**

சைவ சமயம் உலகியல் வாழ்க்கையைச் சாபக்கேடன்றோ,

---

**இதயத்தில் தூய்மை இல்லாதவன் இறைவனை அடைய முடியாது.**

தண்டனையன்றோ குறிப்பிடவில்லை. வரப்பிரசாதம் என்றே கூறுகிறது. இல்லறத்தை நல்லறமாகவே கூறுகிறது. அன்பைக் கடைப்பிடித்து வாழ்பவர்களுக்கு நற்கதியாகிய வீட்டின்பம் தானே கிடைத்துவிடும். சிவனும் அம்மை அப்பராக இருந்தே அடியவர்களுக்கு அருளைப் புரிகின்றான். அவனை வழிபடும் சிவனடியார்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். அவர்களுக்கு நல்ல கதி கிட்டும். எண்ணியது கிடைக்கும் எனறு சம்பந்தப் பெருமான் தனது தேவாரத்திருமுறை மூலம் உறுதி அளிக்கிறார்.

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை
கண்ணில் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே

பல்லவராட்சியின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் சமண சமயம் செல்வாக்குப் பெற்றிருந்தது. பல்லவப்பேரரசின் அரசனாகிய முதலாம் மகேந்திர பல்லவனும், பாண்டியப் பேரரசின் அரசனாகிய நின்ற சீர் நெடுமாறனும் சமண சமயத்தைச் சார்ந்திருந்தார்கள். “மன்னன் எவ்வழி மன்னுயிர் அவ்வழி” என்ற முதுமொழிக்கேற்ப மக்களில் பலரும் சமணத்தை தழுவி நின்றார்கள். சமண சமயப்பிடியில் இருந்து தமிழ் நாட்டில் சைவத்தை மீட்ட பெருமை அருட்கடலாகிய சம்பந்தருக்கும், அன்புக் கடலாகிய அப்பர் பெருமானுக்குமே உரியது. இவர்கள் இருவரையும் சைவநெறி பெற்ற “புண்ணியக்கண்” எனச் சேக்கிழார் பெரியபுராணத்திலே போற்றுகின்றார்.

உலகியல் வாழ்வில் சைவம் பெண்ணுக்கு உயர்வான இடத்தை வழங்கியுள்ளது. ஆனால் சமணசமயம் பெண் பிறப்பையே பாவப்பிறப்பு என்றே கூறியது. இவர்கள் இல்லற வெறுப்பாளர்கள், துறவு விருப்பாளர்கள். பெண்களை வெறுத்த சமணர்கள் அவர்களை மாயப்பசாசு என்று பழித்தார்கள். ஆனால் நாயன் மார்களால் உருவாக்கப் பெற்ற பக்தி இயக்கம் இல்லறத்தின் ஊடாக இறைவனை அடையலாம் என அறிவுறுத்தியது. பெண்களை மதித்தது. மனையறம் காக்கும் மங்கைகளாகப் பெண்களைத் திருமுறைகள் போற்றுகின்றது. வாலிப வயதில்

---

**உலகத்திலுள்ள எல்லாச் சக்திகளையும் விட ஆன்ம சக்தியே அதிக பலமுள்ளதாகும்.**

ஏற்பட்ட மனமாற்றத்தினால் தடுமாறிப் போய் சமணம் சார்ந்திருந்த அப்பரை சைவத்திற்கு மீட்ட பெருமை அவரது சகோதரியாகிய திலகவதியாருக்கே உண்டு. பாண்டிய அரசனும் பாண்டிநாடும் மீண்டும் சிவநெறியில் திளைப்பதற்கு மங்கையர்க்கரசியாரே காரணகர்த்தாவாக இருந்தார். ஞானக்குழந்தையாகிய சம்பந்தரை பாண்டி நாட்டிற்கு அழைத்து சைவத்தின் உயர்நிலையைப் பாண்டிய அரசனுக்கும் மக்களுக்கும் உணர்த்தி வைத்தார். இதனால் "மங்கையர்க்குத் தனியரசி எங்கள் தெய்வம்" என்றும், "தென்னர் குலப்பழிதீர்த்த தெய்வப் பாவை" என்றும் சேக்கிழார் பெருமானால் பாராட்டப்படும் தகுதியினைப் பெற்றார்.

அதிகாரம், அந்தஸ்து, பொருளாதார பலம், வெளித்தோற்றக் கவர்ச்சி என்பவற்றைக் கருத்தில் கொண்டு அக்கால சைவமகளிர் தமது வாழ்க்கைத் துணையைத் தேடவில்லை. தெய்வ நம்பிக்கை உடையவர்கள், வாழ்வில் ஒழுக்கம் தவறாதவர்கள், கோலத்தாலும், சீலத்தாலும், புனிதமானவர்களாக வாழ்பவர்களே தங்களுக்குத் துணைவராகக் கிடைக்க வேண்டுமென்று இறைவனை வேண்டி னார்கள்.

**"உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்**
**உன்னடியார் தாள் பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்**
**அன்னவரே எம் கணவர் ஆவார் அவருகந்து சொன்ன**
**பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்"**

என்ற திருவெம்பாவைப் பாடலுக்கு விளக்கமாக அக்கால மகளிர் வாழ்ந்தார்கள்.

இந்து சமயம் கூறுகின்ற ஆச்சிரம தர்மங்களில் இல்லறமும் ஒன்றாகும். உலகில் உயிரினங்கள் வாழ்வதற்கு காற்று எவ்வாறு அவசியமோ அவ்வாறே மற்றைய ஆச்சிரம நெறிகள் நிலைத்து நிற்பதற்கும் இல்லறத்தானின் பங்களிப்பு அவசியம் என மனுதர்ம சாத்திரம் கூறுகிறது. "காதலன் ஒருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவிலும் கைகொடுத்து" இல்லறத்தை நல்லறமாக நடாத்த வேண்டும் என்றே இந்து சமயத்திருநூல்கள் எல்லாம் கூறுகின்றன. கொலை, களவு, கள்ளுண்ணல், காமம், பொய் ஆகிய ஐந்து குற்றங்களைப் பஞ்சமாபாதகங்கள் என நமது சமய நூல்கள் எடுத்துக் கூறியுள்ளன. காம இச்சையிலே அறிவிழந்து பிறர் மனைவியிடம் தொடர்பு கொண்டு நாசம் அடைகிற

---

**அன்பு எப்போதும் சகிப்புத்தன்மை உடையதாக இருக்கும்.**
**எங்கு அன்பு இருக்கிறதோ அங்கு ஆண்டவன் இருக்கிறார்.**

பாவிகளைத்திருமந்திரம் பல பாடல்களில் சாடியுள்ளது.

கணவனுக்காக ஐம்புலன்களையும் அர்ப்பணித்து வாழும் மனைவியைப் புறக்கணித்துவிட்டு விலைமகளிர் பால் சென்று விழுந்து எழும்பும் ஆடவர்களைத் திருமந்திரம் கண்டிக்கிறது. இரு மாங்கனிகளில் ஒன்று திருத்தி வளர்க்கப்பெற்ற இனிமை நிறைந்த தேமாங்கனி. மற்றொன்று பல மரங்களிடையே வளர்ந்துள்ள புளி மாங்கனி. இவை இரண்டும் ஒன்று போலத் தோற்றமுடையன. குலமகளை விட்டு விலை மகள் மீது நாட்டம் கொள்பவர்கள் தீராத உடல் நோய்க்கு ஆளாகி அல்லல்ப்படு வார்கள். அருமையில் கிடைத்த தேமாங்கனியை ஒதுக்கி வைத்து விட்டுத் தோப்புப் புளிக்கனியை நாடும் கசடர்களைத்திருமூலர் கருத்து அறியாதவர்கள் எனக் குறிப்பிடுகின்றார்.

திருத்தி வளர்த்ததோர் தேமாங்கனியை
அருத்தம் என்றெண்ணி அறையில் புதைத்துப்
பொருத்தம் இலாத புளிமாங்கொம்பேறிக்
கருத்தறியாதவர் கால் அற்றவாறே

(திருமந்திரம் - 202)

கற்பு என்பது பெண்ணுக்கு மாத்திரமல்ல ஆணுக்கும் உரியது என்பதைக் 'கற்பு நெறி என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம்" என மகாகவி பாரதியார் பாடியுள்ளார். ஆனால் பாரதியார் பாடுவதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே மனைமாட்சி காக்கும் மனைவிதான் இருக்க விலை மகளிர் வீடு புகுந்த தனது கணவர் திருநீலகண்டருக்கு அவரது மனைவியார் தன்னைத்தீண்டுவதற்கு தடையுத்தரவு போட்டார். ஆனால் கணவருக்குச் செய்ய வேண்டிய மற்றைய பணிவிடைகளை எல்லாம் தவறாது செய்து வந்தார். இளமையிலே பூண்ட விரதத்தை இருவரும் முதுமை வரை அயலில் இருப்பவர்கள் கூட அறியாவண்ணம் கடைப்பிடித்து வந்தார்கள் என்பதைப் பெரிய புராணம் பின்வருமாறு சித்தரிக்கிறது.

கற்பு உறு மனவியாரும் கணவனாருக்கு ஆன எல்லாம்
பொற்பு உறமெய் உறாமல் பொருந்தவே போற்றிச் செய்ய
இப்புறம் பொழியாது அங்கண் இருவரும் வேறு வைகி
அற்பு உறு புணர்ச்சி இன்மை அயல் அறியாமை வாழ்ந்தார்.

(தொடரும்)

---

புல்லிய எண்ணங்கள் மனக்குழப்பம் தருகின்றன.
சீலங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது பொறுமை.

# சாயி அவதாரமும் பயன்பாடுகளும்
## பாகம் - 7

சு. சிவதாஸ், முன்னைநாள் ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி யாழ்ப்பாணம்

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா அவர்களுடைய உபந்நியாசங்கள், அவர் சனாதன சாரதிக்கு எழுதிய வாஹினி தொடர்கட்டுரைகள், அவரது உரையாடல்கள் எல்லாம் நூல் உருவில் வந்துள்ளன. கணக்கில் அடங்கா இந்நூல்களில் அவர் எழுதிய வாஹினி 2ம் தொடர்களில் இந்துசமயத்தின் பிரஸ்தான திரயமும் அடங்குகின்றன. உபநிடதம், பிரம்ம சூத்திரம் மற்றும் பகவத் கீதை ஆகிய மூன்றுமே பிரஸ்தான திரய நூல்களாகும். உபநிடதமோ வேதத்தின் ஞானகாண்டப்பகுதியில் அடங்குவது பிரம்ம சூத்திரமோ, உபநிடத கருத்துக்களால் சுருக்கி வேதவியாசரால் சூத்திரமாக தரப்பட்டது. ஒவ்வொரு சூத்திரமும் ஒவ்வொரு வரியாகவே இருக்கும். மூன்றாவதாக, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் அருளியது பகவத்கீதை என்ற அருள்நூலாகும். கீதை இந்துசமயத்தின் சாராம்சமாக அமைந்திருக்கிறது. இந்த மூன்று பிரமாண நூல்களுக்கு பகவான் பாபா தமது வியாக்கியானத்தை உபநிடத வாஹினி, சூத்திர வாஹினி, கீதா வாஹினி என்ற பெயர்களில் எழுதியிருக்கிறார். சாதாரண மக்களுக்கு விளங்காத பகுதிகளாகக் காணப்படும் பிரஸ்தான திரயங்களை பகவான் மிகவும் கவரக்கூடிய முறையில் தெளிந்த பொருளில் கூறியிருப்பது மக்களுக்கு பெருந்துணையாக அமைந்திருக்கின்றது.

தமிழிலே தோன்றிய புராணங்களில் மூன்று புராணங்கள் சிறப்புப் பெறுகின்றன. பெரிய புராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணம். சேக்கிழார் நாயனார்ரால் எழுதப்பெற்றது. கந்தபுராண மானது கச்சியப்ப சிவாச்சாரியாரால் எழுதப்பெற்றது. திருவிளை யாடற் புராணமானது பரஞ்சோதி முனிவரால் எழுதப்பெற்றது. இந்த மூன்று புராணங்களும் மக்களுக்கு பக்தியை இலக்கிய ரசனையோடு ஊட்டுகின்றது. இனி, பன்னிரு திருமுறைகள் தமிழருக்கு தோத்திர நூலாகவும் பதினான்கு மெய்கண்ட சாத்திரங்கள் சாத்திர நூலாகவும் அமைகின்றன. இவற்றைவிட பிற்காலத்தில் வாழ்ந்த அடியார்கள் ஆக்கிய நூல்களும் ஏராளம். இவ்வாறு நூல்கள் எழுந்தபோதும் அவற்றில் பெரும்பான்மையாவன

---

அன்பற்ற வாழக்கை சாவுக்கு ஒப்பாகும்.
உடலுக்கு உணவுபோல ஆத்மாவிற்குப் பிரார்த்தனை அவசியம்.

செய்யுள் நடையில் இருப்பதால், தற்கால மக்களுக்கு அவற்றின் பயனை பெறமுடியாமல் போகின்றது. அண்மைக் காலங்களில் வாழ்ந்த ஞானியர், அவதார புருஷர்களது உரை நடை வாசகங்கள் மக்களுக்கு பேருதவியாக அமைகின்றது. யாழ்ப்பாணத்தில் யோகர் சுவாமிகள் வாழ்ந்து மறைந்தது 1964இல், அவருடைய சீடன் மார்க்கண்டு சுவாமிகள் பின்னர் செல்லத்துரை சுவாமிகள் ஆகியோரும் மறைந்துவிட்டார்கள். யோகர் சுவாமிகளது நற்சிந்தனை என்ற நூலும் அவர் அடியார்களுக்கு சொன்ன அமுத மொழிகளும் ஒப்பற்ற தனிச்சிறப்பைப் பெறுகின்றன. யோகர் சுவாமிகளுடைய போதனைகளும் பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபாவின் போதனைகளும் அச்சொட்டாக ஒரேவிதமாகவே இருக்கின்றது. 1965ஆம் ஆண்டில் இலங்கையில் யாழ்ப்பாணத்தில் (தற்சமயம் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ) டாக்டர் சோமசுந்தரம் என்பவரின் வீட்டில்த் தான் இந்திய சாயி நிறுவனத்தின் பஜனை தொடங்கிவைக்கப்பட்டது. இதன் பின்னரே தான் இந்திய சாயி நிறுவனத்தின் பஜனை மற்றும் ஏனைய நடவடிக்கைகள் பிறவெளிநாடுகளிலும் தொடங்கப்பட்டது.

ஆத்மா (ஆன்மா) ஒன்றுதான் என்ற தத்துவம் யோகராலும் சாயிபாபாவாலும் வெளிப்படையாக மக்களுக்கு சொல்லப்பட்டது. பக்குவப்பட்ட ஞானிகள் மட்டத்தில் தரிசிக்கப்படும் இந்த அத்வைத உண்மை சாதாரண மக்களுக்கும் சொல்லப்பட்டது. இவர்களால்தான். ஆன்மாக்கள் அனந்தகோடி உண்டென்றும் கடவுள் ஒருவர் பிறிதாக உள்ளார் என்று சொல்லப்படும் துவைத தத்துவம் அத்வைத தத்துவத்தோடு முரண்பட்டது போல் தோன்றினாலும், பக்குவப்பட்டவர்கள் இந்த வித்தியாசத்தை உணர்வதில்லை.

கடலில் இருந்து ஆவியாகி, பின்னர் மழையாகி, பின்னர் ஆறாகி ஓடும் நீரானது மீண்டும் கடலிலே சங்கமிப்பதுபோல், ஆன்மாக்கள் இறைவனிலே தோன்றி, இறைவனால் காக்கப்பட்டு, இறைவனிடமே சென்று சேர்கின்றன. இந்த உண்மையை மணிவாசகப் பெருமான் திருவெம்பாவை கடைசிப்பாடலில் அருமையாகச் சொல்லுகின்றார். அப்பாடலின் இடையில் வரும் 3 வரிகளை இங்கே தருகின்றேன்.

---

மக்களுள் ஒற்றுமையை உண்டாக்குவது நன்னெறியாகும்.
தியானத்தால் கடவுளைக் காணும் ஞானக்கண் உண்டாகிறது.
இறைவனே நமக்கு அடைக்கலம்.

போற்றி எல்லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றி எல்லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றி எல்லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்

என்று வருவது இந்தப் பேருண்மையைத்தான் காட்டுகின்றது.

பாபாவின் போதனைகள் மனிதனும் தெய்வம் என்ற வேதக் கருத்துக்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதாகவே அமைகின்றது. பாபா பிரஸ்தான விரயங்களுக்கு வியாக்கியானமாக, எழுதிய வாஹினிகள் பக்தியின் முக்கியத்துவத்தை சொல்லத் தவறவேயில்லை. இரண்டென்றே பக்தியிலே ஆரம்பித்து நீயும் நானும் ஒன்றென்றே உணரும் அத்வைத பக்தியிலே இது முடிவடைகின்றது. சாயுச்சியம் என்று சொல்லப்படுவது இவ்வாறு இரண்டும் அறக்கலத்தலேயாகும்.

பகவான் பாபா அவராக யாருக்கும் தீட்சை கொடுத்ததில்லை. அவருக்கு சீடர்களும் இல்லை. அவருக்கு பக்தர்களே இருக்கின்றனர். பக்தர்களுக்கு அவர் குண்டலினியை எழுப்பும் யோக மார்க்கத்தைப் பற்றிய எச்சரிக்கையை அடிக்கடி விட்டிருந்தார். தர்மம், பக்தி, ஞானப்பாதைகளிலே மக்களை ஊக்கப்படுத்தினார். குரு மூலமன்றி குண்டலினி யோகம் செய்வது, மக்களை தீயநெறிக்குச்செல்ல வைப்பது மட்டுமல்லாமல், மக்களை பைத்தியமாக்கிவிடும் என்று எச்சரித்தார். பகவான் ஆக்கிய நுல்களைவிட பகவானைப் பற்றிப் பக்தர்கள் எழுதிய நூல்கள் ஏராளம் ஏராளம்.

அவர் சித்துக்களை செய்து காட்டினார் என்று ஒரு சாரார் வாதம் செய்வார்கள். அவர் மாயையோடு கட்டுண்டு பிறந்த மனிதர் அல்லர். அவர் ஒரு அவதார புருசர். அவர் மறைந்த பின்பும் பல இடங்களிலும் அவரது பக்தர்களில் வீட்டில் திருநீறு குங்குமம் என்பன அவரது திருவுருவப் படங்களில் இருந்து சொரிகின்றது. ராமர், கிருஷ்ணர் வரிசையில் வைத்து எண்ணப்பட வேண்டியவரே சாயிபாபா என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ராமர் சராயு நதியில் கலந்து சங்கமமானார். கிருஷ்ணர் இடது கால் பெருவிரலில் அம்புபட்டு உடலை நீத்தார். சாயி சாதாரண மனிதன் போல் உயிர் நீத்தார். மூவரும் மாளிகையில் வாழ்ந்தார்கள். அரச பரம்பரையில் பிறந்தார்கள்.

இவ்வாறு சாயியின் பல பெருமைகளை ஆத்ம ஜோதியில் பலதரம் வாசித்துள்ளீர்கள். (தொடரும்)

---

ஆசையை வென்றவனே நிறைந்த செல்வம் உடையவன்.

# அடைக்கலம் அவனியின் தாரகம்

பேரறிஞர் முருகவே பரமநாதன்

நாடிப்புலங்கள் உழுவார்கரமும் நயவுரைகள்
தேடிக்கொழிக்கும் கவிவாணர் நாவும் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே நின்பாதம் அடைக்கலமே
(மலரும்மாலையும்)

நம்பிக்கையே சமயமும் வாழ்வும் தும்பிக்கையான் பாதங்களே நம்பிக்கையின் இருப்பிடம். எச்சமயத்தோரும் சுமந்து செல்வது நம்பிக்கையையே. அடைக்கலம் அனவரதன் நாவில் உதிர்த்து ஆறாய்ப்பிரவாகித்து அமைதிச் சமுத்திரத்தோடு சங்கமம் ஆகிறது. படித்துறை பலவாகலாம். ஆறு ஒன்றுதான் எந்த வகையிற் சிந்தித்தாலும் யார்சிந்தித்தாலும் அடைக்கலம் நம்படைக்கலம். கண்ணபிரானின் பகவத் கீதையில் இருந்து பைபிள்வரை அடைக்கலம் இடம்பெறக் காண்கிறோம். எங்கள் ஊர்கள் தோறும் அமைந்த சினகரங்களும் அடைக்கலத்தையே தாரகமாய்க் கொண்டுள்ளன. அடைக்கலமாதா கோயில், இதற்கோர் முன் உதாரணமாகும். இந்த மரபிலே அடைக்கல மாலை, அடைக்கலப்பத்து போன்ற தமிழ்மாலைகள் புலவர்கள் நாவாற் தவழ்ந்தன. அடைக்கலாங்குருவிகளின் கூடுகள்தரும் பாடம் என்ன? இறையை மையமாய்வைத்து அடைக்கலாந் தோட்டங்கள் நல்லமுன்மாதிரியாகும். எமது மனப்பாரக்கற்களை கவலைகளைத் துன்பங்களை மாற்ற அடுத்த வழியென்ன? எம்மனச்சுமைகளை மனப்பாரங்களை எங்கே இறக்கி வைப்பது யார் ஏற்றுக்கொள்வது எல்லாத்துக்கும் சுமைதாங்கிகள் எம் இதயங்களே. ஆக எவராலும் தாங்கொணாத் துன்பச்சுமைகளை இறக்கி எல்லாம் வல்ல அடைக்கலநாதனின் பாதபங்கையங்களில் இறக்கி வைத்துவிட்டுச் யாலியாய் நாம் வெறுங்கைகளை வீசிநடக்க வழி ஒன்றே ஒன்றுதான். அதுவே எங்கள் வாழ்வும் வளமும் செழிக்க, இறுதி விடுதலை பெறச் சரணாகதியே உயரிய மார்க்கமாகும். கிறீத்த வர்கள் அடைக்கலமாதாவை வழிபடுவர் அடைக்கல மாதாகோயில் எங்கும் இருக்கிறது ஏன். அடைக்கலாங்குருவி. கூடு கட்டும் பாங்கில் இருந்து நாங்கள் பாடம் படிக்க வேண்டுமென்றோ!

---

நமது ஒவ்வொரு தோல்வியும் வருங்கால வெற்றித் தூண்களாகும்.

அடைக்கலமுத்து எனப் பெயர் வைக்கிறோமே ஏன்?

எமதுமனச்சுமைகளை மனப்பாரங்களை கவலைகளைச் சுமைகளை எங்கே இறக்கிவைப்பது இறைவன் திருவடிகளிலே இறக்கி வைத்து மனச்சுமைகளைக் குறைப்போமாக.

எமது பயணங்களில் எங்கள் கைகள் வெறுங்கைகளாக அமையட்டும்.

எத்தனையோ மகான்களும் ஏழைகளும் இம்மார்க்கத்தின் வழிநடந்து ஆத்மவிடுதலை பெற்றனர். அன்றோ! இதை இன்னொரு பாவனையிற் சொன்னால் மனம்மொழிமெய்யால் சொன்னால் பூரண சரணாகதியடைதல் எனலாம். கவலை துன்பம், இடுக்கண் என்பன யாவர்க்கும் பொது ஆணென்ன, பெண் என்ன, அரசனென்ன, ஆண்டியென்ன நொந்து போன வழியில் செய்வது அறியாது திகைத்து எலும்பும் தோலுமாயினர். இந்த மனவேக்காட்டைத் தாயுமானவர் சுவாமிகள் சிந்தைத்துயரென்று ஒருபாவி, சினந்து சினந்து போர் முயங்கி நிந்தைக்கிடமாய்ச் செகவாழ்வை நிலையென்று எண்ணி இருப்பேனை என்று பாடியுள்ளார். எனவே அடைக்கலம் கொடுப்பது ஒன்றே நேர் வழியாகும்.

திருவாசகம் பாடிய மணிவாசகர் இருபத்து நான்காம் பதிகமாக அடைக்கலப் பத்துப் பாடினார். அடைக்கலம் கொடுத்தபின் எமக்கு ஏது ஜோலி.

மாதிரிக்கு ஒரு வாசகம்

வழங்குகின்றாய்க்குன் அருளார் அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன்விக்கினேன்வினையேன் என்விதி யின்மையால்
தழங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந்து உய்யக்கொள்ளாய்
அழுங்குகின்றேன் உடையாய் அடியேன் உன் அடைக்கலமே

படைகக்ல மாகஉன் நாமத் தெழுத் அஞ்செென் என் நாவிற்
கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப்பும் உனக்காட்செய்கிறேன்
துடைக்கினும் போகேன் தொழுது வழங்கித் தூநீறு அணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம்பலத் தரனே
(அப்பர் தேவாரம் 4ஆம் திருமுறை)

மைவரும் கண்டத்தர் மைந்தா என்று வாழ்த்தும் இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்று அறியேன் கற்ற கல்வியும் போய்க்

---

**பெரிய பெரிய கஷ்டங்கள் பட்ட பிறகுதான் சிறிய உண்மைகள் புலப்படுகின்றன.**

பைவருங் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போது அடியேன் உன் அடைக்கலமே
- கந்தர் அலங்காரம் 84

திரவணிநீடிய போரூர்க்கை கூப்பி செழுங்கமலச்
சரவண வாவியில் நீருடித்தங்கச்சதங்கை கொஞ்சும்
குரவணிபாதம் பணிவோர்க்கு இனிமை கொடுக்கும் பிரான்
அரவணி வோன்குமரா அடியேன்உன் அடைக்கலமே
திருப்போரூர்ச் சந்நதி முறை

அந்த ணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயிர் அதனை
வவ்வினாய்க்கு உன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீஎனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே
- சுந்தரர் தேவாரம் 7ஆம் திருமுறை

கொண்ட மருந்தும் கடைவாய் வழியுகக் கோழைவந்துன்
கண்டம் அருந்துயர் ஆம்மோது நின்பாதம் கருதறியேன்
வண்டமருந்துளவோனே தென் சோலைமலைக்கரசே
அண்டம் அருந் தும்பிரானே இன்றேயுன் அடைக்கலமே
- அஷ்டப் பிரபந்தம் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்

மாணிக்கங்கொண்டு குரங்குஎறி வொத்து முகிலோடு முட்டி
ஆணின் பொன் அன்ன உலகளந்த மாணிக்கமேமரகதமே
மற்றொப்பாரை இல்லா அணிப்பொண்ணே
அடியேனுடைய ஆவிஉன் அடைக்கலமே
- நம்மாழ்வார்

ஆழ்வாரும் நாயன்மார்களும் இறைவன்பாற் கொண்ட கூர்த்த பக்தியினால் தம்மை ஆண்டவனிடம் ஒப்படைத்தார்கள். இந்தப்பாதையே சரணாகதித்தத்துவத்தின் உட்கிடையாகும். 1008, 10008, 100008 என அர்ச்சனை புரிகிறோம். மாணிக்கர் காட்டிய பாதையை மறந்துவிட்டோம். அப்பதிகத்தை ஆயிரம்தரம்பாடி

---

தர்மத்தாலும் கருணையாலும் எய்தப்படும் வெற்றியே நிலைபெற்று நிற்க வல்லது

மலர்கள் தூவின் ஒரு இலட்சமாம். இதை ஆத்மஜோதி நடைமுறைப்படுத்த ஓர் தினம் பாடிப்பயன் பெற்றோம். உயர்திரு சிவ முத்துலிங்கமும் அடியேனும் சிவ பரமானந்தமும் செயற்படுத்தினோம்.

---

## 2012 தை மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்

| | |
|---|---|
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| திரு. சண்முகநாதன் சரவணன் | $ 200.00 |
| செல்வன். மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| செல்வன் மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| திரு. விநாயகர், கந்தவனம் | $ 200.00 |
| திரு. கனகசபை கந்தையா | $ 200.00 |
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திரு. நிமலகாந்தன் மிதுரன் | $ 200.00 |
| திரு. நிமலகாந்தன் மிகிரன் | $ 200.00 |
| திருமதி. கோகிலாம்பாள் கனகசபாபதி | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திரு. சு. சிவபரமானந்தம் | $ 200.00 |
| திரு. செல்வா இராஜதுரை | $ 200.00 |
| திருமதி. அன்னபூரணம் ஞானசம்பந்தர் | $ 200.00 |
| செல்வன் யசாகன் ஈஸ்வரமூர்த்தி<br>செல்வி மாதங்கி ஈஸ்வரமூர்த்தி<br>செல்வன் வேலவன் ஈஸ்வரமூர்த்தி<br>செல்வன் முதல்வன் ஈஸ்வரமூர்த்தி | $400.00 |

# சைவசித்தாந்த வளர்ச்சியில் ஈழத்தறிஞரின் பணிகள்

சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்
ஆதீனப்புலவர், இலண்டன் மெய்கண்டார் ஆதீனம்

சிவபாதசுந்தரம்

சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் (1878 - 1957) ஆசிரியராகப் பணி புரிந்தவர். பள்ளிக்கூடப் பாடநூற் திட்டத்துக்காக சமய நூல்கள் எழுதத் தொடங்கியவர். இதனால் அவரின் நூல்களில் எளிமையும் விளக்கமும் இருப்பது இயல்பு. இத்தகைய ஒரு நூல் அவரின் விளக்கவுரையுடன் வெளிவந்த திருவருட்பயன். இது இலங்கையிலுள்ள பாடசாலைகளுக்காகப் பதிப்பிக்கப்பட்டது. இந்நூலிலுள்ள விசேடவுரை சிவஞானபோதம், சிவஞானசித்தியார் ஆகியவற்றின் கருத்துக்களையும் அவற்றின் பேருரைகளையும் துணையாகக் கொண்டு எழுதப்பட்டது. மாணவருக்கன்றி அறிஞருக்கும் பயன்படும் சிறந்த சித்தாந்த நூல் இது.

தர்க்க முறையிலும் தெளிவாகவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு நூல் 'The Saiva School of Hinduism'. இதனை இங்கிலாந்திலுள்ள 'George Allen and Unwin Ltd' என்னும் புகழ்பெற்ற பிரசுர நிறுவனம் 1934-ல் பதிப்பித்தது. சைவசமய, சைவசித்தாந்த அறிவை அனைவருக்கும், குறிப்பாக ஆங்கில அறிவு மிக்கவருக்கு, எளிமையாகப் புகட்டுவது இந்நூல்.

நாவலரின் சைவ வினாவிடை மாணவரின் தரத்துக்கேற்ப முதலாம் புத்தகம், இரண்டாம் புத்தகம் என்று இரு நூல்களாக எழுதப்பட்டுள்ளன. சிவபாதசுந்தரம் எழுதிய சைவபோதம் நூலும் முதலாம் புத்தகம், இரண்டாம் புத்தகம் என இரண்டாக உள்ளன. ஆரம்ப நிலையிலுள்ள மாணவருக்கும் அறிவு மிகுந்த மாணவருக்குமாக இவை அமைந்துள்ளன.

நாவலரும் அவர் வழியில் பணி செய்தவர்களும்போல் சிவபாதசுந்தரமும் அன்னிய மதத்தினரின் சைவத்துக்கு முரணானன கருத்துக்களையும் பிரசாரங்களையும் மறுப்பதற்காக எழுதியவை பல. வயலெற் பரஞ்சோதி என்ற கிறித்தவப் பெண்மணி முனைவர் பட்டத்துக்காகச் செய்த ஆய்வு நூல் சைவ சித்தாந்தம் பற்றியது. அதில் பல தவறான, சித்தாந்தத்துக்கு முரணான, கருத்துக்கள்

---

அன்பு கொள்கையிலே இருந்தால் போதாது. செய்கையில் இருக்க வேண்டும்.

இருந்தன. இந்த ஆய்வு நூலுக்கு ஒரு மறுப்பெழுதி உண்மையை விளக்குவதற்குத் தகுந்த அறிஞர் சிவபாதசுந்தரமே என்று தமிழகத்திலுள்ள தருமபுர ஆதீனம் கருதியது. அவ்வாதீனத்தின் வேண்டுகோளின்படி அவர் எழுதிய நூல் 'An Outline of Sivagnanabodham with a Rejoinder to a Christian Crtic'. இந்நூல், ஆய்வு நூலின் பொருத்தமற்ற கருத்துக்களை மறுப்பதோடு, சிவஞானபோத நூற்பாக்களுக்கு சிறந்த விளக்கம் அளிப்பதாகவும் உள்ளது. இதுவும் அவரின் பிற நூல்களும் கட்டுரைகளும் பல நூல்களை ஆய்ந்து சிந்தனைத் தெளிவுடன் எழுதப்பட்டவை. புராணங்கள் சமய உண்மையை உணர்த்த வந்த கதைகள் என்பதை வலியுறுத்துபவர் சிவபாதசுந்தரம் அவர்கள். அவரின் 'கந்தபுராண உண்மை' என்ற நூல் புராண பாத்திரங்களும், தொடர்புடைய கதைகளும் உணர்த்தும் சித்தாந்தம் சார்ந்த உள்ளார்ந்த கருத்துக்களை வெளிக்கொணர்ந்து விளக்குகிறது. அத்தகைய ஒரு நூலை ஈழத்து நவாலியூர் சோமசுந்தரப்புலவரும் எழுதியுள்ளார். அதன் பெயர், 'கந்தபுராணக் கதைகளும் அவை உணர்த்தும் உண்மைநூற் கருத்தும்' என்பதாகும்.

### பண்டிதர் மு. கந்தையா

செந்திநாதையர் பிறந்த குப்பிழானுக்கு அயற்கிராமமான ஏழாலையில் பிறந்தவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் (1917 - 2002). இதனால் அவர் ஏழாலைப் பண்டிதர் கந்தையா என்று பொதுவாக அழைக்கப்படுவதுண்டு. சித்தாந்தத் தெளிவும் மும்மொழிப் புலமையும் கொண்ட தமிழ்ப் பண்டிதரான கந்தையாவுக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலக்கிய கலாநிதி என்னும் பட்டம் அளித்துக் கௌரவித்தது.

சைவத்தையும் அதன் தத்துவத்தையும் பேணி வளர்ப்பதில் தன் வாழ்நாளைக் கழித்த பெருமகன் பண்டிதர். முப்பதுக்கு மேற்பட்ட அரிய நூல்களும் பல ஆய்வுக் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இவை அனைத்தும் சைவத்துக்கும் சித்தாந்த வளர்ச்சிக்கும் அரண்செய்வன.

சைவ சமயக் கருத்துக்களைக் கூறும் பலர், அவை வேதங்களில் உள்ளன, ஆகமங்களில் உள்ளன என்று கூறுவதுண்டு. எந்த வேத நூலையும் ஆகம நூலையும் குறிப்பிட்டுச்

---

**அன்பினால் உலகத்தின் துயரங்களை எளிதாக மாற்றிவிடலாம்.**

சொல்வதரிது. பண்டிதர் தான் மேற்கோள் காட்டும் வேதாகமக் கருத்துக்களை குறிப்பிட்ட நூல்களின் பெயர்களைக் கூறி விளக்குவதைக் காணலாம். சைவசித்தாந்த நூற்கருத்துக்களை, வேதாகம நூற்கருத்துக்களை ஆதாரமாகக் காட்டி விளக்குவது இவரின் தனித்திறமை இத்திறமையை ,இன்றைய அறிஞர் பலரிடம் காண்பதரிது.

வேதாகமங்களை ஆதாரமாகக் காட்டினாலும், சைவசித்தாந்த நூல்கள் தமிழ்மொழியிலே இருப்பதால், அதன் விளக்கத்துக்கு தமிழ்மொழி விளக்கம் இன்றியமையாதது என்பது அவர் கருத்து. 'சித்தாந்தச் செழும் புதையல்கள்' என்ற அவரின் நூலிலுள்ள பின்வரும் வரிகள் ஒரு உதாரணம்.

'சைவசித்தாந்த சாத்திரங்கள் தமிழ் மொழியிலேயே வாய்த்துள்ளன. இவையனைத்தையும் ஒரு கூட்டாக எண்ணுவார்க்கு, தமிழ்க் கலாசாரப் பின்னணியிலே சைவ சித்தாந்தக் கலை சோபிப்பது புலனாகும். தொல்காப்பியம், சங்க இலக்கியம், திருக்குறள், திருமுறைகள் முதலிய அனைத்து நூல்களிலும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் செறிந்து கிடக்கும் நிலையும் சுவாரஸ்யமானதொன்று. ஆதலால் சைவசித்தாந்த விளக்கம் தமிழ்மொழி விளக்கத்திற்கு இன்றியமையாதென்பது சொல்லாமலே யமையும். இதனால் உயர் தமிழ் இலக்கிய இலக்கண மரபு வழிப்பாடான தமிழ் அறிவுநிலை சைவசித்தாந்த விளக்கத்துக்கு ஒரு அடிப்படைத் தேவை என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.'

இவ்வாறு எழுதும் இம்மேதையின் உயர் தமிழ்ப் புலமை சித்தாந்த விளக்கங்களில் காணும் மயக்கங்களையும் முரண்பாடுகளையும் களைந்தன. உண்மைவிளக்கம் எனும் சித்தாந்த நூலின் ஒரு பாடல் முத்தியில் பேரின்பத்தை அனுபவிப்பது ஆன்மா, அந்த இன்பத்தைக் கொடுப்பவன் இறைவன் என்று கூறுகிறது. இது எல்லோருக்கும் ஒத்த கருத்தே. ஆனால், இக்கருத்தைத் தொடர்ந்து 'இதனை விளைவித்தல் மலம்' (இதனை விளைவிப்பது ஆணவமலம்) என்று கூறுகிறது. இது விளங்க முடியாததாக, மயக்கம் தருவதாக உள்ளது. ஆணவத்திலிருந்து விடுபட்ட நிலையே முத்தி நிலை. இந்த நிலையில் ஆணவம் எப்படி ஆன்மாவுக்கு இன்பத்தை விளைவிக்கும்? விளங்க முடியாத இத்தொடருக்கு அறிஞர்கள் வெவ்வேறு விளக்கங்கள்

**ஒவ்வொருவரும் மனித ஆன்மாவை மதித்து நடக்கவேண்டும்.**

அளித்துள்ளனர். 'முத்தியில் ஆணவம் திருந்திய நிலையிலுள்ளது', 'முத்தியிலும் ஆணவம் உண்டு. ஆனால் செயற்படுவதில்லை' போன்ற விளக்கங்கள் தரப்பட்டன. இவை சரியான விளக்கங்களாக அமையவில்லை என்பதைப் பண்டிதர் உணர்ந்தார்.

ஆகமக் கருத்துக்களைக் கொண்டவை சித்தாந்த நூல்கள் என்றாலும், அவை தமிழ்ச்செய்யுள் நூல்களே. தமிழிலுள்ள சாத்திர நூல்களுக்குப் பொருள் காண்கையில் செய்யுள் உத்தி முறை களைத் தழுவியே பொருள் காணவேண்டும். இது நூலாசிரியர்களின் உள்ளக்கிடக்கை என்பது பண்டிதரின் கருத்து. சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய இலக்கண நுட்பங்களிலும் தர்க்க விதிகளிலும் பயிற்சியின்றி சித்தாந்தச் செய்யுட்களை விளங்குதல் இயலாதென்பதும் அவரின் கருத்து. எனவே 'இதை விளைவித்தல் மலம்' என்ற தொடருக்கு விளக்கம் காண தமிழ்க் கவிதை உத்திகளை உதாரணத்துக்கு எடுக்கிறார்.

'கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை', என்பது திருக்குறள். 'கெடுப்பதூஉம்' என்ற சொல்லுக்கு பரிமேலழகர் 'பூமியின்கண் வாழ்வாரைப் பெய்யாது நின்று கெடுப்பதும்' என்று உரை காண்கிறார். இதனை எடுத்துக் கொண்டு பண்டிதர் குறிப்பிட்ட பாடலை விளக்குகிறார். 'பெய்யாமை' என்ற எதிர்மறை கெடுதலுக்குக் காரணமாயிருப்பதால் 'மழை' காரணமென்று கூறப்படுகிறது. இதுபோல் மறையாமை என்ற எதிர்மறை இன்ப விளைவுக்குக் காரணமாயிருப்பதால் 'மலம்' காரணமென்று கூறப்படுகிறது. ஆகவே 'இதை விளைவித்தல் மலம்' என்ற தொடரில் 'மலம்' என்பது 'ஆணவமலம் உயிரை மறையாமை' என்றே பொருள் கொள்ள வேண்டும். இது போன்ற பண்டிதரின் விளக்கங்கள் சித்தாந்த வளர்ச்சிக்கு ஆக்கமளித்தன. இந்து சமயம் என்பது இந்திய சமயங்கள் பலவற்றைக் குறிக்கும் ஒரு பொதுப்பெயர். அது ஒரு தனிச்சமயம் அல்ல. விவேகானந்தர் போன்ற ஞானிகளும் இதனைக் கூறியுள்ளனர். இந்து சமயம் என்ற பெயரால் உடன்பாடற்ற தத்துவ விளக்கங்களும் வழிபாடுகளும் சைவத்துள் புகுந்துள்ளன. சங்கரரின் அத்வைத வேதாந்தம் இவற்றில் ஒன்று. நாவலர் பிறந்த யாழ்ப்பாணத்தில், சமார்தராகத் தம்மைக்காட்ட முயலும் சைவக் குருமாரினால், செல்வாக்கு மிக்க சிலரின் உதவியுடன் கட்டப்பட்ட ஆஞ்சனேயர் கோயில் இன்னொன்று. இவை போன்ற சைவத்தைச் சிதைக்கும்

---

**உண்மையான கல்விபெறுவது இரண்டாவது பிறப்பை போன்றது.**

ஊடுருவல்களைக் கண்டித்துப் பண்டிதர் எழுதிய கட்டுரைகள் பல. இவற்றில் முக்கியமானதொன்று 'சைவமண்ணில் சைவம் சிதைக்கப்படுகிறது! உள்ளிருந்தே கொல்லும் பகை'. இன்னொன்று, 'ஆஞ்சநேயர் சைவர் வழிபாட்டுத் தெய்வமல்ல'.

பதி, பசு, பாசம் மூன்றும் என்றுமுள்ள அனாதிப் பொருட்கள் என்பது சைவசித்தாந்தக் கொள்கை. 'பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில் பதியினைப் போல் பசுபாசம் அனாதி' என்ற திருமந்திரப் பாடல் இதனை விளக்குகிறது. இதில் வரும் கடைசியடி பதியணுகிற் பசுபாசம் நிலாவே' என்று வருகிறது. இதன் பொருள் 'பதியாகிய இறைக்கு முன்னால் பசுவைப் பற்றிய பாசம் நில்லாது நீங்கும்' என்பது. இது சித்தாந்த உண்மை. ஹவாய் ஆதீனத்தின் சித்தாந்தம் தொடர்பான வெளியீட்டில், இறைவனை அணுகினால் பசுவாகிய ஆன்மாவும் பாசப்பொருட்களும் இருக்கமாட்டா என்று பொருள் கொள்ளப்பட்டுள்ளது. கடவுள் ஒன்றே மெய்ப்பொருள், உயிர் உட்பட்ட மற்றவை அதன் பரிணாமங்கள் அல்லது தோற்றங்கள் என்ற வேதாந்தக் கருத்துக்கு இவ்வெளியீடு துணை செய்கிறது. இவ்வாதீனத்தின் 'Monism and Pluralism in Saiva Siddhanta' என்ற நூலிலும் தவறான கருத்துக்கள் சித்தாந்தக் கொள்கையாகக் காட்டப்பட்டுள்ளன. பொருத்தமற்ற இக்கருத்துக்களை மறுப்பதாக அமைந்தது பண்டிதரின் 'சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை' என்ற நூல்.

ஆறுமுக நாவலர் அவர்கள் தனது பெரியபுராணப் பதிப்பில், ஒவ்வொரு நாயனார் சரிதையின் முடிவிலும், சூசனம் என்ற பெயரில் ஒவ்வொரு கட்டுரை எழுதி வெளியிட்டார். சைவசித்தாந்தக் கருத்துக் களுடன் சைவம் குறித்த அரிய விளக்கங்கள் கொண்டவை இச்சூசனங்கள். இருபத்து மூன்று நாயன்மார்களுக்கு மட்டுமே அவை எழுதப்பட்டன. பரந்துபட்ட அவரின் பணிகளுக்கிடையில் அவற்றை நிறைவு செய்ய அவருக்கு நேரம் கிடையாமல் இருந்திருக்கலாம். மற்றைய நாற்பது நாயன்மாருக்கும் சூசனம் எழுதி, நாவலரின் பணியை நிறைவு செய்யும் தகுதி பண்டிதருக்கே உண்டென மலேசியா சைவசித்தாந்த நிலையம் உணர்ந்தது. அதன் வேண்டுகோளுக்கிசைந்து பண்டிதர் எழுதி நிறைவு செய்தார்.

திருமுறைகளுக்கு சித்தாந்த விளக்கமளித்த பண்டிதர், சைவக்கிரியைகளுக்கும் அவ்வாறே செய்தார். அவரின் 'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்' என்ற நூல் இத்தகையது. 'சித்தியார்

---

**கலாச்சாரமே நல்லொழுக்கத்தை நமக்குப் போதிக்கின்றது.**

திறவுகோல்', 'சித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி' போன்ற அவரின் பிற நூல்களும் சைவசித்தாந்த அறிவுக்கும் ஆய்வுக்கும் துணைசெய்வன. சித்தாந்த மாணவரையும் அறிஞரையும் ஆய்வாளரையும் ஊக்குவிப்பதும், தேவையெனில் திருத்துவதும் பண்டிதரின் பண்பு. அவருடன் நான் (இக்கட்டுரை ஆசிரியர்) நேரில் கண்டு கலந்துரையாடினது மிகமிகக் குறைவு. ஆனால் கடிதத் தொடர்பு நீண்டகாலம் இருந்தது. சென்னை சைவசித்தாந்த மன்றத்தின் 'சித்தாந்தம்' இதழில் வந்த எனது முதற் கட்டுரை 'அகரம் போல் நிற்கும் இறை' என்பது. அப்பொழுது நான் சென்னையிலே வாழ்ந்தேன். அக்கட்டுரையை வாசித்த பண்டிதர் அவர்கள் அதனைப் பாராட்டி, அது செந்திநாதையர் பிறந்த ஊரின் (எனது ஊரின்) வாசனையால் வந்ததென்றும் தொடர்ந்தும் நான் எழுத வேண்டுமென்றும் வேண்டிக் கடிதம் எழுதியிருந்தார். இது அவர் எனக்கெழுதிய முதற் கடிதம்.

மேலை நாட்டுத் தத்துவங்களில் காணப்படுபவை சில சித்தாந்தம் உள்ளிட்ட இந்திய தத்துவங்களில் நேராகப் பேசப்படுவதில்லை. இவற்றில் ஒன்று Freewill என்பது. தமிழ் நூல்களில் இதற்கு நேரான சொல்லைக் காண்பதரிது. உலக சைவப் பேரவையின் 'சைவ உலகம்' இதழில் நான் ஆங்கிலத்தில் எழுதிவந்த தொடர் கட்டுரைகளில் ஒன்று Freewill. இதனைப் படித்த பண்டிதர், 'Freewill ஆய்வு முக்கியமான ஒரு விஷயம். அதை நல்ல முறையில் கையாண்டிருக்கிறீர்கள்', என்று எழுதினார். இச்சொல்லுக்கு 'தற்றுணிபு' என்பது தமிழ்ப்பெயர் என்று கூறி, அதனைச் சைவசித்தாந்த உண்மைகளுடன் தொடர்பு படுத்தி விளக்கியிருந்தார். அவரின் இந்த விளக்கம் 'சைவ உலகம்' இதழில் பின்னர் வெளிவந்தது. அவர் எழுதிய இத்தகைய விளக்கங்கள் பல. அவை சித்தாந்த வளர்ச்சிக்குப் பெரிதும் துணைசெய்வன. சைவத்தைச் சிதையாமற் காப்பதற்காக 'சைவத்தமிழ் அறிவியற் பண்பாட்டியக்கம்' என்ற பெயரில் பிரசுரங்களையும் அவர் வெளியிட்டது குறிப்பிடத்தக்கது.

**பிற அறிஞர்கள்**

சபாபதி நாவலர் (1844 - 1903) எழுதிய நூல்கள் பதினான்கு என்று அறியப்படுகிறது. இவருக்கும் திருவாவடுதுறை ஆதீனம்

---

மனித தருமங்களில் அடிப்படையான தருமம் அன்பு.
எல்லோருக்கும் ஒழுக்கம் அவசியம் தேவை.

'நாவலர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது. ஆறுமுக நாவலர் வேண்டுகோளுக்கிணங்கி அவர் சிதம்பரத்தில் நிறுவிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார். சென்னையில் சித்தாந்த வித்தியானுபாலன யந்திரசாலை என்ற அச்சகத்தை நிறுவி, 'ஞானாமிர்தம்' என்ற பத்திரிகையையும் நடத்தி வந்தார்.

**சபாரத்தின முதலியார்** (1858 - 1922) தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆறு அரிய நூல்கள் எழுதியவர். பத்தொன்பதாம் நூற்றாண்டு இறுதியில் பரவிய கடவுள் மறுப்புக் கொள்கையை எதிர்த்து அவர் எழுதிய நூல் 'ஈசுர நிச்சம்'. பிற மதத்தவரின் சைவ நிந்தனையையும், அவதூறுகளையும் பொய்யுரைகளையும் எதிர்த்து அறிவியல் நோக்கில் எழுதப்பட்ட சிறந்த ஒரு நூல் 'Essentials of Hinduism in the Light of Saiva Siddhanta'.

**மு. திருவிளங்கம்** (1859 - 1922) சித்தியார், சிவப்பிரகாசம், கந்தரலங்காரம் ஆகிய நூல்களுக்கு அரிய உரைகள் எழுதியுள்ளார். தெளிவும் எளிமையும் மிக்கவை இவரின் உரைகள். சிவப்பிரகாசத்துக்கு இவர் உரைபோல் சிறப்பான உரை இதுவரை வெளிவந்ததில்லை.

**வேலணை வி. கந்தப்பிள்ளை** அவர்கள் தத்துவப்பிரகாசர் செய்த தத்துவப்பிரகாசம் நூலை ஆராய்ந்து, தெளிவுரையும் விளக்கவுரையும் எழுதி அச்சில் முதலில் வெளியிட்டவர். இவர் நாவலரின் மாணாக்கராக இருந்தவர்.

**திக்கம் செல்லையாபிள்ளை** எனப் பெயர் கொண்ட அச்சுவேலி ஈசான சிவனார் சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் அருளிச் செய்த துகளறுபோதம் நூலுக்கு முழுமையான உரை எழுதியவர். துகளறுபோதம் பதினான்கு சைவ சித்தாந்த நூல்களில் ஒன்றில்லை எனினும், அது பதினைந்தாவதாகக் கொள்ளத் தக்க தகுதி வாய்ந்ததென்று கருதுபவருமுண்டு.

**கலாயோகி ஆனந்த குமாரசாமி**

சைவசித்தாந்தத்தையும் சிவநடனத்தையும் உலகறியச் செய்த

---

**வாழ்க்கையின் ஜீவநாடி நீதியேயன்றி அநீதியன்று.**

பெருமை ஈழத்துக் கலாயோகி ஆனந்த குமாரசாமியைச் சாரும். உண்மை விளக்கம் என்ற சைவசித்தாந்த நூலின் பாடலொன்றைக் கருவாகக் கொண்டு அவரின் புகழ் பெற்ற 'சிவநடனம்' (Dance of Siva) என்ற நூலில் 'சிவநடனம்' என்ற கட்டுரை அமைந்துள்ளது.

அச்சுவேலி குமாரசாமிக் குருக்கள் சைவசித்தாந்தம், சைவக்கிரியைகள் குறித்த அரிய நூல்களை அளித்தவர். இவரின் 'முப்பொருள் விளக்கம்' என்ற நூல் சைவசித்தாந்தப் பொருளை விரித்துக் கூறும் சிறந்த நூல். 'சிவபூசை விளக்கம்' என்ற நூல் ஆகமம், சித்தாந்தம், திருமுறைகள் ஆகியவற்றின் பின்னணியில் சிறந்த விளக்கங்களைத் தருகின்றது. இவர் வேறு நூல்களும் ஆக்கியுள்ளார்.

அ. விஸ்வநாதன் 'ஒரு விஞ்ஞானப் பட்டதாரி' (A Science Graduate) என்ற பெயரில் நூல்களும் கட்டுரைகளும் எழுதியவர் அ. விஸ்வநாதன். சிவஞானபோதம், சிவஞான சித்தியார், திருமந்திரம், ஆகமங்கள்பற்றி யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் இந்துசாதனத்தில் தொடர் கட்டுரைகளாக இவர் எழுதியவை பின்னர் நூலுருவாக வந்தன. இங்ஙனம் வந்த ஒரு சிறந்த நூல் 'The Elements of Saiva Siddhanta' என்பது. இது சித்தியார்ப் பொருளைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

### சிவநந்தி அடிகள்

ஈழத்தில் பிறந்த சிவநந்தி அடிகள் இலண்டன் மெய்கண்டார் ஆதீனத்தையும் அதன் செயல் அங்கமான உலக சைவப் பேரவையையும் தோற்றுவித்து அரும் பணிகள் செய்தவர். ஞானசூரியன் என்னும் இயற்பெயர் கொண்ட இவர் தமிழ், சைவம், சித்தாந்தம் ஆகிய துறைகளில் பத்துக்கு மேற்பட்ட நூல்களும் பல அரிய கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

மேற்கண்ட அறிஞர் வரிசையில், தென்புலோலியூர் ந. கதிரைவேற்பிள்ளை, உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளை, நவாலியூர் சோமசுந்தரப்புலவர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை என்று மேலும் பலரைக் குறிப்பிடலாம். இவர்கள் எல்லோரும் ஈழத்தில் சைவமும் அதன் தத்துவமான சித்தாந்தமும் சிதையாமல் வளர ஆக்கமிகு பணிசெய்த பெருமக்களாவர்.

---

ஏழைகளின் கண்களில் இருந்து கண்ணீர் வராமல் நடந்துகொள்

# 2010 தை மாதத்திற்குப்பின்
# ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

அமரர் வடிவேலு விவேகானந்தராசா, புன்னாலைக் கட்டுவன், வடக்கு, நினைவாக (2011) $300.00

அமரர் செல்லம்மா பரராசசிங்கம், புங்குடுதீவு, 6ஆம் வட்டாரம் நினைவாக (2011) $500.00

அமரர் இளையதம்பி ஆறுமுகம், உடுப்பிட்டி, இலக்கணாவத்தை நினைவாக (2011) $120.00

அமரர் க விமலன் (விசு), பண்டத்தரிப்பு நினைவாக (2011) $150.00

அமரர் சரவணைமுத்து ஞானசம்பந்தர், சாவகச்சேரி நினைவாக (2011) $100.00

அமரர் காசிப்பிள்ளை நடராசா, புங்குடுதீவு 11ஆம் வட்டாரம் 16ஆவது வருட நினைவாக (2012) $200.00

அமரர் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, உடுப்பிட்டி நினைவாக (2012) $100.00

அமரர் திருமதி நாகரத்தினம் கனகரத்தினம் அல்வாய் நினைவாக (2012) $150.00

சிவ முத்துலிங்கம் அவர்களின் மணி விழாவை முன்னிட்டு பேரவையின் திருக்கூட்டத்தினரும் அங்கத்தவர்கள் சிலரும் மனமுவந்தளித்த அன்பளிப்பு $745.00

சிவ முத்துலிங்கம் அவர்களின் 61ஆவது பிறந்தநாளை முன்னிட்டு பேரவையின் திருக்கூட்டத்தினர் மனமுவந்தளித்த அன்பளிப்பு $515.00

## ஆத்மஜோதி பத்திரிகைக்கு நிதி உதவி செய்ய விரும்புவோர் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 416-724-6240


---

எல்லா உயிர்களும் ஈசன் கோயில்கள் ஆதலின் எல்லா உயிர்களையும் போற்றுதல் வேண்டும். இதுவே தலை சிறந்த அறம். – கிருபானந்த வாரியார்

---

# சோதிச்சுவாமிகள் (சுவாமி பிரகாஷ்மயானந்தா)

ஓர் அன்பர்



அன்புள்ளம், குதூகலமான சிரிப்பு, சிறிய உருவம், பரந்த உள்ளம், கணீரென்ற குரல் இதுதான் சோதிச் சுவாமி. இலங்கையில் அவர் பாடிப்பணியாத தலங்களே இல்லை எனலாம். சப்பளாக்கட்டையை அடித்துக் கொண்டு குழந்தையைப் போல் ஆடிப்பாடும் அவர் எளிமையும் பக்தியும் நம் உள்ளத்தை உருக வைக்கும். 90 வயதளவிலும் ஒவ்வொரு சந்நிதியாக அவர் விழுந்து வணங்கும்பொழுது அந்த உடல் உறுதியை விட மன உறுதி வியக்க வைக்கும். 85 வயதளவில் குழந்தையைப்போல் பாடிக்கொண்டு குதூகலமாக கதிரமலை ஏறும் பாங்கு முருகனின் திருவருளை முழுமையாக பெற்ற அடியவர் இவரென அவர்தம் அடிபணிய வைக்கும். கதிர்காமம் சென்றால் நான் என்னை மறந்து விடுவேன் எனச் சோதிச் சுவாமிகள் சொல்வதுண்டு. எவ்வளவு கூட்டமிருந்தாலும் அவர் விடுவிடுவெனச் சென்று கந்தன் முன்னிலையில் கைதட்டிப் பாடுவதை எவரும் தடுத்ததில்லை.

எதிரிலாத பக்தி தனைமேவி
இனிய தாள்நினைப்பை யிருபோதும்
இதயவாரிதிக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாமவெற்பி லுறைவோனே
கனகமேருவொத்த புயவீரா
மதுரவாணியுற்ற கழலோனே
வழுதிகூனிமிர்த்த பெருமாளே

என அடிக்கடி அவர் பாடும திருப்புகழ் இன்னும் காதுகளில் ஒலிக்கிறது.

'ஆடும்பரிவேல் அணிசேவல் எனப்பாடும் பணியே பணியாய் அருள்வாய்' எனப் பாடிப் பணிந்த அற்புதக் குரல் இன்று

---

அன்பைவிட மேலானது ஒன்றும் இருக்க முடியாது.

ஓய்ந்துவிட்டது. கதிர்காமத்தில் மீண்டும் அந்தத் தோத்திரப் பாடல்களையும் பஜனைப் பாடல்களையும் கேட்க மாட்டோமா எனக் கதிர்காமம் செல்லும்போது மனம் தவிக்கிறது. அந்தத் 90 வயதுக் குழந்தை முருகன் அடியை அடைந்துவிட்டது, வஞ்சகமற்ற அந்தப் புனித ஆத்மா இன்று நம்மிடையே இல்லை. 'அப்பனே முருகா' என அடிக்கடி கூறும் அந்தக் குரலை இனிக் கேட்க முடியாது. நினைக்கும்பொழுது மனம் கனக்கவே செய்கிறது.

சுவாமிகள் 1919ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி திருவாதிரை நட்சத்திரத்தில் ராஜரட்ணம்தம்பதிகளுக்கு மகனாக மலேசியாவில் அவதரித்தார். சுவாமிகளுக்குப் பெற்றோர் இட்ட பெயர் சிவசோதி. பெயருக்கேற்ப ஒளிபொருந்திய மகிழ்ச்சிகரமான முகம். காங்கேசன்துறையைச் சொந்த ஊராகக் கொண்டவர். வழக்கறிஞராகப்படித்தார் எனினும் வழக்கமான வாழ்க்கை அவரை வசீகரிக்கவில்லை. சிந்தையைச் சிவன்பால் வைத்தமையால் வேலையில் நாட்டம் ஏற்படவில்லை வழிபாடே அவர் முதல் வேலையாயிற்று. யோகர் சுவாமிகள் மீது மிகுந்த ஈடுபாடு உடையவராயிருந்தார். இவரின் இப்போக்கைக் கண்டு கலங்கிய பெற்றோர் யோகர்சுவாமிகள் சொன்னால் இவர் கேட்பாரென எண்ணி சில உறவினர்களுடன் கொழும்புத்துறை ஆச்சிரமத்துக்கு சோதிச் சுவாமியை அழைத்துச் சென்றனர். யோகர்சுவாமிகளும் அவருக்கே உரித்த பாணியில் அங்குள்ள ஒவ்வொருத்தரையும் உனக்கென்ன வேலை எனக் கேட்க அவர்களும் தங்கள் தங்கள் வேலைகளைச் சொன்னார்கள். ஈற்றில் சோதிச்சுவாமிகளின் முறை வந்ததும் யோகர்சுவாமிகள் இவருக்கும் எனக்கும் வேலையில்லை எனக் கூறியருளினார். சோதிசுவாமிக்கோ மகாதிருப்தி. பெற்றோரும் ஒருவாறு மனம் தேறினார்கள்.

சுவாமி சிவானந்தர் இலங்கை வந்தபோது இந்தியாவில் ரிஷிகேசத்தில் அமைந்துள்ள சிவானந்த ஆச்சிரமத்துக்கு அழைத்தார்கள். சோதிச்சுவாமிகளுக்கு அங்கு சந்நியாசம் வழங்கி ஆன்மீகம் பிரகாசிக்க சுவாமி பிரகாஷ்மயானந்தா என்னும் பிரகாசமான பெயரை வழங்கினார்கள்.

சுவாமிகள் ஐரோப்பிய நாடுகள் அமெரிக்கா, கனடா போன்ற வெளிநாடுகள் பலவற்றுக்குச் சென்று சொற்பொழிவுகள் ஆற்றி பஜனைப்பாடல்களும் பாடியிருக்கிறார்கள். 'டனிஷ்' மொழியில் அவர் பாடிய தோத்திரப்பாடலைக் கேட்டுள்ளேன். அங்குள்ள

---

**மக்களின் அன்பை விட மேலானது ஒன்றுமே இருக்க முடியாது.**

பத்திரிகையில் இவரைப்பற்றிய கட்டுரைகள் வெளியாயுள்ளதைக் கண்டுள்ளேன். மக்களை வசப்படுத்தி காசு சம்பாதிக்கும் இன்றைய 'சாமியார்கள்' மத்தியில் பல ஆக்கபூர்வமான விடயங்களை அள்ளித் தந்துவிட்டு ஒன்றுமே தெரியாதாது போலிருக்கிறதே 'இந்தக் குழந்தை' என வியந்துமுள்ளேன்.

கோண்டாவிலைச் சேர்ந்த குடைச்சுவாமிகள் என அழைக்கப்படும் பேரருளாளர் சோதிச்சுவாமிகளுக்கு குடை பிடித்ததாக கேள்விப்பட்டதுண்டு. பின் அதனை சோதிச் சுவாமிகளிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டேன்.

வெள்ளவத்தையில் ராஜசிங்க வீதியில் அமைந்துள்ள அவருடைய தம்பியார் இல்லத்தில் சுவாமிகள் குறைவின்றி வாழ்ந்து வந்தார்.

கடைசிக்காலங்களில் கண்பார்வை மங்கலாகியாகியதால் வெளியில் நடமாடுவதைக் குறைத்துக் கொண்டார். சமாதியாக ஏறக்குறைய 3 மாதங்களுக்கு முன் சந்தித்த பொழுது "சுவாமி ஏதாவது தோத்திரப் பாடல்கள் பாடமுடியுமா" எனக் கேட்டேன். ஓ! என உற்சாகமாகத் தலையாட்டினார். என்னையெனக் கறிவித்தான் எங்கள் குருநாதன்' என யோகர்வாமிகளின் நற்சிந்தனைப் பாடலில் சில வரிகளைப் பாடினார் அதே மணிக்குரலில் தொடர்ந்து

முடியாப்பிறவிக் கடலிற் புகார்முழுதும் கெடுக்கும்
மிடியாற் படியில் விதனப்படார் வெற்றிவேற் பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான் அவுணர் குலமடங்கப்
பொடியாக்கிய பெரு மான்திரு நாமம் புகல்பவரே

என்னும் கந்தரலங்காரப் பாடலையும் பாடினார். முருகா! முருகா என ஓயாமல் சொல்லும் சோதிச்சுவாமிகள் 2012 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 6ஆம் திகதி உத்தராட நட்சத்திரமும் அபரபக்க திருதியையும் கூடிய தினத்தில் கொழும்பு மாநகரில் முடியாப் பிறவிக் கடலைக் கடந்து முருகன் திருவடியை அடைந்தார்.

சோதிச்சுவாமிகளின் ஆசீர்வாதம் நம் ஆன்மீக வாழ்க்கைக்கு உறுதுணையாக நிற்க வேண்டுமென அவர்தம் திருவடியைப் பணிகின்றேன்.

---

**வாழ்க்கை என்ற மரத்திற்கு இளமையில் பயில்வது வேர் போன்றது.**

## நாவலர் வழி நின்று சைவத்திற்கும் தமிழ் மொழிக்கும் தொண்டாற்றியவர்

# தம்பியப்பா சண்முகலிங்கம்

சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம்



சைவ சேனாதிபதியாக, சைவத்தின் காவலராகத் திகழ்ந்த நாவலர் பெருமானின் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக அவர் வழிவந்த சைவப் பெரியார்கள் பலரின் கூட்டு முயற்சியினால் (29-04-1888) இச்சைவ பரிபாலன சபை ஆரம்பிக்கப்பட்டது. இச்சபையின் முதலாவது தலைவராக நாவலரின் மருமகன் வித்துவ சிரோன்மணி பொன்னம்பல பிள்ளையும், செயலாளராக நாவலரின் அண்ணன் மகன் கைலாசபிள்ளையும், பொருளாளராக நாவலரின் உறவினர் பசுபதிச் செட்டியாரும் இருந்தார்கள். பொன்னம்பல பிள்ளைக்குப் பின்பு திரு. தா. செல்லப்பாபிள்ளை தலைவராக இருந்தார். தொடர்ந்து சேர் பொன் இராமநாதன், பொன் குமாரசுவாமி, சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் ஆகியோர் தலைவர்களாக இருந்து கடமையாற்றினார்கள். தொடர்ந்து பல சைவப் பெரியார்கள் தலைமை தாங்கிச் சைவ பரிபாலன சபையை வழிநடாத்தினார்கள். பரீட்சைச் செயலாளராகப் பலவருட காலம் பணியாற்றிய சைவப்பெரியார் கலாநிதி வ. கந்தசாமி சில வருட காலம் தலைவராகப் பணியாற்றினார். இவர்கள் வரிசையில் சைவபரிபாலன சபையின் 24 ஆவது தலைவராக இருந்து பணிபுரிந்த தம்பியப்பா சண்முகலிங்கம் (28-10-2012) இல் தனது 82வது வயதில் இறைவனடி எய்தினார்.

சைவ ஆசார ஒழுக்கம் நிறைந்த அமரர் சண்முகலிங்கம் சைவபரிபாலன சபையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து மிகுந்த அர்ப்பணிப்பு உணர்வோடு செயற்பட்டார். சைவ பரிபாலன சபையின் சொத்துக்களை வரையறை செய்து பாதுகாப்பதில் பெரிதும் அக்கறை கொண்டிருந்தார். தெய்வீகப் பணிகளுக்கென்று நமது முன்னோர்கள் வழங்கிய சொத்துக்கள் சிவத்துரோகிகளின் கையில் சிக்கிச் சிதையாமல் இருத்தல் வேண்டுமென்று விரும்பினார். சைவபரிபாலன சபை சொத்துக்களை அபகரிக்க முயன்றவர்களிடமிருந்து அவற்றை மீட்டு எடுப்பதற்காக

---

**நாம் பாடுபட்டுத் தேடியதே நமது பொருளாகும்.**
**இகழ்ச்சியிலும் பார்க்க புகழ்ச்சி கொடியதாகும்.**

நீதிமன்றம் வரை சென்று போராடி வெற்றி கண்டார். "தூயவை துணிந்தபோது பழிவந்து தொடர்வதில்லை" என்ற கம்பனின் வாக்கிற்கு அமையத் தர்மத்திற்கு மாறாக நடப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நேரிலே கண்டிப்பார்.

நல்லைக் கந்தன் ஆலயத்திற்கு முன்பாக உள்ள நாவலர் மண்டபத்தில் நிறுவப்பட்டிருந்த நாவலர் சிலை இரவோடிரவாக இடம்பெயர்க்கப்பட்டபொழுது அதற்கு எதிராகக் குரல் கொடுத்தவர்களில் அமரர் சண்முகலிங்கமும் ஒருவராவார். மீண்டும் நாவலர் சிலை உரிய இடத்திற்கு வரவேண்டுமென்று ஆணித்தரமான காரணங்களை முன்வைத்துப் பேசியதில் அமரர் முதலிடம் வகித்தார். இரண்டு வருடங்களுக்கு முன்பு மீண்டும் நாவலர் சிலை மணிமண்டபத்திற்கு கொண்டு வரப்பட்டு பிரதிஷ்டை செய்தபொழுது பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

சைவர்களால் கோயில் என்று போற்றப்படும் சிதம்பரம் நடராஜப் பெருமான் கோயிற் சூழலிலே மாலை கட்டித் தெருவிலே சைவ பரிபாலன சபைக்குச் சொந்தமான புண்ணிய நாச்சியார் மடம் உள்ளது. இதனைப் புனர்நிர்மாணம் செய்து இரண்டு மாடிக்கட்டிடமாக அமைத்துச் சிறந்ததோர் யாத்திரிகர் விடுதியாக மாற்றினார். இலங்கையிலிருந்தும் புலம் பெயர் நாடுகளில் இருந்தும் திருத்தல யாத்திரையாக சிதம்பரம் செல்லும் யாத்திரிகர்கள் அனைவரும் இது எங்களின் சொந்த மடம் என்ற உரிமையோடு தங்கி நின்று ஆனந்தக் கூத்தனைத் தரிசிக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்துள்ளார்.

சைவபரிபாலன சபையின் நீராவியடியில் உள்ள நாவலர் மண்டபத்தில் வருடம் தோறும் சைவமாநாட்டினை மிகச் சிறப்பாக நடாத்தி வைத்தார். பாரத நாட்டிலிருந்து பல சைவப் பெரியார்களை வரவழைத்து சிறப்புரை ஆற்றச் செய்தார். இவ்வருடம் ஆடி மாதத்தில் இடம்பெற்ற சைவமாநாட்டில் சைவசித்தாந்தப் பேரறிஞர் வை. இரத்தினசபாபதி அவர்களைப் பிரதம விருந்தினராக அழைத்துச் சொற்பொழிவுகள் நடைபெறச்செய்தார். ஈழத்தில் உள்ள சைவசமய அறிஞர்கள் பலரையும் மாநாட்டில் வளவாளர்களாக இணைத்துக் கொண்டார். பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றும் பல நிகழ்வுகளையும் மாநாட்டில் இடம்பெறச் செய்தார்.

சைவ வாழ்வு வாழ்பவர்களையே சைவபரிபாலன சபையின் நிகழ்ச்சிகளில் பங்குபற்ற வைப்பார். நாவலர் பாரம்பரியத்தைப்

---

முயற்சிக்கேற்றவாறு மனிதன் முன்னேற்றம் அடைகிறான்.

பேணாதவாகள், மதிக்காதவர்கள் யாருக்கும் சைவபரிபாலன சபை நிகழ்வுகளில் இடமில்லை என்பதில் உறுதியாக நின்றார்.

நாளாந்தம் ஆன்மார்த்த கிரியையாகிய சிவபூசையைத் தவறாது செய்து வந்தார். அருளாளர்கள் தந்த அனுபூதி வாசகங்களாகிய பன்னிரு திருமுறைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தமிழர்சிந்தனையில் முகிழ்த்த உயர் தத்துவமாகிய வைசித்தாந்த தத்துவத்தை நன்கு அறிந்திருந்தார். நாற்பது வருடங்களுக்கு மேலாக சைவபரிபாலன சபையின் பணிகளோடு தம்மை இணைத்துக் கொண்டார். சபையின் செயலாளராக, பொருளாளராக எல்லாம் பணியாற்றியவர் கடந்த ஐந்து வருடங்களாகச் சபையின் தலைமைப் பதவியை ஏற்று வெகு சிறப்பாகச் செயற்பட்டார்.

சிவவாழ்வு வாழ்ந்து, சிவப்பணிகள் புரிந்த அமரர் சண்முகலிங்கத்தின் ஆன்மா கூத்தப் பெருமானின் திருவடிகளில் இணைந்து அமைதிபெற வேண்டுமென்று உலகில் வாழும் சைவப்பெருமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பிரார்த்திப்போமாக.


## தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள் சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்



ஆதீன விலாசம்:
தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்
ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான தவத்திரு கோவை சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!

# திருவாவடுதுறை ஆதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீசிவப்பிரகாச பண்டார சந்நிதிகள்

டாக்டர் இ. இலம்போதரன்

(மகாசந்நிதானம் அவர்கள் 2012 நவம்பர் 22ம்திகதி மகாசமாதி அடைந்தார்கள்)



திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் பதினெட்டு சைவ ஆதீனங்களில் ஒன்றாகும். இது மயிலாடுதுறை-கும்பகோணம் சாலையில் அமைந்துள்ளது. பதினெட்டு சைவ மடங்களைப்பற்றிய குறிப்பு காளமேகப்புலவர் பாடிய திருவானைக்கா உலாவில் 'பதினெண் மடத்திற் பயிலு முதலிகளும்' என்று காணப்படுகின்றது. அகோர சிவாசாரிய பத்ததி மகோற்சவ விதிப்படலத்தில் பாரத தேசமெங்கும் பரந்து விரிந்திருந்த பதினைந்து மடங்களின் பெயர்கள் கூறப்பெறுகின்றன. இவற்றுள் ரிசிகேசத்தில் அமைந்துள்ள கைலாச மடம், பத்ரிநாத்தில் அமைந்துள்ள பத்ரிகாசிரமம் தவிர ஏனைய மடங்கள் இன்றில்லை.

திருவாவடுதுறை ஆதீனத்தின் 23-வது குருமகாசந்நிதானமாக கடந்த 25 ஆண்டுகளாய் விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாசதேசிக பண்டார சந்நிதிகள் கடந்த நவம்பர்மாதம் 22ம் திகதி வியாழக்கிழமை மகாசமாதி அடைந்தார்கள். இவர் திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரத்தில் சைவ வேளாளர் மரபைச் சேர்ந்த விவசாயக் குடும்பத்தில் கோமதி நாயகம்- கோமதி தம்பதியருக்கு 1940-ம் ஆண்டு நவம்பர் 15-ம் தேதி பிறந்தவர். இவரது. இயற்பெயர் சுப்பிரமணியன். கூட்டுறவுப் படிப்பில் பட்டயம் (Diploma) பெற்ற இவர், 1978-ம் ஆண்டில் திருவாவடுதுறை ஆதீனத்தின் 22-வது குருமகா சன்னிதானம் அம்பலவாண தேசிக பரமாச்சாரிய சுவாமிகளிடம் தீட்சை பெற்று, அந்த மடத்தில் சீடராகப் பணியாற்றினார். 1979 இல் யாத்திரை காசாயமும், 1980 இல் மந்திர காசாயமும், நிர்வாண தீட்சையும் பெற்று இதே 1980-ம் ஆண்டில் அந்த ஆதீனத்தின் இளைய சன்னிதானமாகப்

பொறுப்பேற்ற சிவப்பிரகாச தேசிகர், 1983-ம் ஆண்டு ஏப்ரல் 7-ம் தேதி 23-வது சன்னிதானமாக பட்டமேற்றார்.

திருக்கயிலாய பரம்பரை குருமரபில் தழைத்தோங்கி வருகின்ற திருவாவடுதுறை ஆதீனம் சித்தர் சிவப்பிரகாசரிடம் ஞானோபதேசம் பெற்ற அருள்திரு நமசிவாய மூர்த்திகள் அவர்களால் இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றுவிக்கப்பெற்றது. இன்று ஐம்பதுக்கு மேற்பட்ட இடங்களில் இதன் கிளை மடங்கள் உள்ளன. திருவாவடுதுறை, திருநள்ளாறு, திருவிடைமருதூர், சூரியனார் கோயில், திருப்பெருந்துறை (ஆவுடையார் கோயில்) உள்ளிட்ட முப்பத்தைந்துக்கும் மேற்பட்ட இடங்களில் திருவாவடுதுறை மடத்திற்குச் சொந்தமான கோயில்கள் உள்ளன.

இந்த ஆதீனம் அறுநூறுக்கும் மேற்பட்ட தமிழ்நூல்களை வெளியிட்டும், மறுபதிப்புச் செய்தும் வெளியிட்டுள்ளது. இவற்றில் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டார சந்நிதிகளின் காலத்தில் மட்டும் வெளிவந்த நூல்களின் எண்ணிக்கை 165. இது ஆதீன வரலாற்றில் புத்தக வெளியீடுகளில் நான்கில் ஒரு பங்குக்கும் மேலாகும். திருவாவடுதுறை ஆதீன சரஸ்வதி மகால் நூலகத்தில் பழமையான ஓலைச்சுவடிகள், பழைய அச்சுப் பதிப்புக்கள் பல நூற்றாண்டுகளாகப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. 23 ஆவது குருமகாசந்நிதானத்தின் ஒப்புதலின் பேரில், சரஸ்வதி மகால் நூலகத்தில் உள்ள ஓலைச்சுவடிகளின் மறுவடிவப் பாதுகாப்பும் புகைப்படம் எடுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. இவர் காலத்திலேயே ஆதீனத்தின் மாத இதழாகிய 'மெய்கண்டார்' 1982 இல் தொடங்கப்பெற்றது.

பல்கலைக்கழகங்களுக்கு முற்பட்ட காலத்தில் அறிஞர்களை வாழ்வாதாரமும் வருமானமும் தந்து ஆதரித்தும், அவர்களின் ஆராய்ச்சியையும், கற்பித்தலையும் ஊக்குவித்தும், தகுந்தோரை சன்மானமும் பட்டங்களும் தந்து கௌரவித்தும், பல இடங்களி லிருந்தும் கற்க வருவோருக்கு தங்க இடமும், உண்ண உணவும் கொடுத்துக் கல்வி வழங்கியும் தமிழ் நாட்டின் தனிப்பெரும் சர்வகலாசாலையாகத் திகழ்ந்தது திருவாவடுதுறை ஆதீனம். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்து வந்த பல தமிழறிஞர்களை

இனங்கண்டு கௌரவித்து, சன்மானம் அழித்து, வருமானம் தந்து அவர்களின் தமிழ்,சமயப் பணிகளை ஊக்குவித்தது திருவாவடுதுறை ஆதீனம்.

இன்றைக்கு நாம் தமிழ் முழக்கம் செய்தும், தமிழ் செம்மொழி என்று பறை சாற்றியும் கொண்டாடுவதற்கு ஆதாரமாகவுள்ள பழந்தமிழ் நூல்களைக் கிராமம் கிராமமாகச் சென்று தேடிக்கண்டுபிடித்து ஒப்பு நோக்கி,மெய்ப்புப் பார்த்து அச்சில் பதிப்பித்த உ. வே. சாமிநாதையர் அவர்களையும், அவருக்குத் தமிழ்க் கல்வியையும் உணர்வையும் ஊட்டிய அவரது குருவாகிய திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களையும் ஆதீன வித்துவான்களாக வைத்திருந்து அவர்கள் மூலமாக கற்றலும், கற்பித்தலும், நூலாராய்தலும், தேடுதலும் செய்து ஆதரித்து வந்தது திருவாவடுதுறை ஆதீனம். 19ம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற கந்தப்பிள்ளை ஆறுமுகத்தை அவரது தமிழறிவையும், சைவ உணர்வையும் கண்ட மாத்திரத்திலேயே கௌரவித்து ஆறுமுகநாவலராக அனுப்பியது திருவாவடுதுறை ஆதீனமே. நாவலர் மறைந்த பின்னர் ஆதீன குருமகா சன்னிதானங்களுக்கு மட்டுமே வழங்கிவருகின்ற ஸ்ரீலஸ்ரீ பட்டத்தை ஆதீனம் பதிப்பித்த நாவலரின் பெரியபுராண சூசனம் நூல் மூலமாக நாவலருக்கு வழங்கியதும் இந்த ஆதீனமே. 18ம் நூற்றாண்டில் தமிழிலே முதன்முதலில் மாபாடியம் (மஹாபாடியம்) என்னும் விரிவுரையை எழுதிய சிவஞான சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனத்தின் சன்னியாசிகளில் ஒருவரே. இதுவே சிவஞானமாபாடியம். தமிழிலும், சைவத்திலும் இதுபோன்ற ஆழமான கருத்துச் செறிவும், தத்துவ ஞானமும், தர்க்க நியாயமும் நிறைந்த நூல் வரலாற்றிலேயே முன்னரும் இல்லை பின்னரும் இல்லை. அறிவுப் பசியும், ஞான தாகமும் உள்ளவர்கள் மட்டுமே தேடும் முடிவான தமிழ் நூல் இதுவே. பொது மக்களின் பார்வைக்கும் படிப்புக்கும் எட்டாதிருந்து வந்த இந்நூலை முதன் முதலில் பதிப்பித்து 1921 இல் வெளியிட்டவர் சூரியனார்கோவிலாதீனத்தைச் சார்ந்த யாழ்ப்பாணம் இலக்கணம் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் ஆவார்.

இப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்பும், தொன்மையும், பணியும் நிறைந்த

---

**வீட்டிற்கு ஒளிதரும் விளக்கே வீட்டை எரிக்கவும் செய்யும்.**

திருவாவடுதுறை ஆதீனத்தின் 23வது குருமகா சன்னிதானமாகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் தனது காலத்தில் காசி முதல் கன்னியாகுமரி வரை யாத்திரை செய்து 69 கிளை மடங்களின் நிர்வாகத்தையும் 50 ஆதீனக் கோவில்களின் நிர்வாகத்தையும், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களின் நிர்வாகத்தையும் சீர் செய்தார். திருவிடைமருதூரில் மேல்நிலைப்பள்ளி, திருவாவடுதுறையில் மெட்ரிகுலேசன் பள்ளி, பல ஊர்களில் ஆரம்ப பள்ளிக்கூடங்கள், நூல்நிலையங்கள், தட்டச்சுப் பயிற்சி நிலையங்கள் போன்றனவும் இவர் காலத்தில் சிறப்புற்றன. நலிவடைந்த மடங்களான அன்னப்பன் பேட்டை தாயுமான சுவாமிகள் ஆதீனம், இருளஞ்சேரி ஆதீனம், சொர்க்கபுரி ஆதீனம் ஆகியனவற்றுக்கு ஆண்டு தோறும் உதவி வழங்கி வந்தார். கீழககோட்டையூர் வள்ளலார் குருகுலம், வேதாரணியம் கஸ்தூரிபாய்காந்தி கன்யா குருகுலம், கும்பகோணம் அன்னை கருணை இல்லம் முதலான ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு ஆண்டு தோறும் ஆதீனத்தில் இருந்து உதவித்தொகை வழங்கி வந்தார்.

இவர் காலத்துப் பணிகளிலெல்லாம் சிறப்பானதும் தலைமையானதுமான பணி 1992 இல் இவர்களால் தொடக்கப்பட்ட சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம் ஆகும். அதற்கு முன்னரே ஒரு சில ஆண்டுகளாக நடந்து வந்த தபால் மூலமான சைவ சித்தாந்த பயிற்சி இவ்வாறு நேர்முகப் பயிற்சியாகப் பரிணமித்தது. ஆரம்பத்தில் மூன்றாண்டுப் பயிற்சி நெறியாக இருந்த பயிற்சி நெறி 2003 இல் இருந்து இரண்டு வருடப் பயிற்சி நெறியாக்கப் பட்டது. இதற்குத் தமிழ்நாடு முழுவதும் பல மாவட்டங்களிலும், நகர்களிலும், ஆந்திரா, கேரளம், கன்னடம் ஆகிய மாநிலங்களிலும் பயிற்சி மையங்கள் உள்ளன. கடல் கடந்து மலேசியா, அவுஸ்திரேலியா நாடுகளில் கூட இதன் பயிற்சிகள் அவ்வப்போது நடாத்தப்பெறுகின்றன. பயிற்சி நிறைவில் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 'சித்தாந்த இரத்தினம்' என்ற விருது வழங்கப்படுகின்றது. இதுவரை முப்பதாயிரத்துக்கும் அதிகமானோர் இப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெற்றுச் சித்தாந்த இரத்தினங்களாகியுள்ளனர். வேற்று மதத்தவர்களான கிறிஸ்துவர்களும், இஸ்லாமியர்களும் இவற்றுள் அடங்குவர்.

---

**பிழைக்கு இடம் கொடேல்.**

அவர்களில் சிலர் பயிற்சியாளர்களாகவும் இருந்து சிறந்துள்ளனர். புலவர் ஞா. அந்தோனிராசு போன்றோர் இவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள். எமது ஞானகுருவாகிய பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களும் திருவாவடுதுறை ஆதீனத்தில் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையத்தில் பட்டம் பெற்றவரே.

2010ம் ஆண்டில் இருந்து சைவத்திருமுறைப் பயிற்சி மையம் சந்நிதானம் அவர்களால் தொடங்கப்பெற்று தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் பயிற்சிகளை நடாத்தி வருகின்றது, இங்கு திருமுறைப் பாடல்கள் வரலாற்று விளக்கம், பொருள் விளக்கம், பண் விளக்கம், இசை விளக்கங்களுடன் பயிற்சி அளிக்கப் படுகின்றன. இதனுடைய முதலாவது தேர்வு அண்மையில் நடைபெற்றது.

சமீப காலத்தில் சமார்த்த ஆதிக்கத்தினாலும், இலௌகீக ஆதிக்கத்தினாலும் ஆதீனச்சுவர்களுக்குள்ளும், மடங்களுக்குள்ளும், சிலஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் சைவ மாநாடு களுக்குள்ளும் இதுவரை முடங்கியிருந்த சைவ சித்தாந்தமும், சைவத் திருமுறைகளும் இந்தப் பயிற்சி மையங்களினூடாகப் பட்டி தொட்டிகளெல்லாம் வீறுநடை போடத் தொடங்கியுள்ளன. இருபத்து மூன்றாவது குருமகா சந்நிதானமாகத் திகழ்ந்த ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பண்டார சந்நிதிகள் அருளாட்சி செய்த இருபத்தைந்து ஆண்டுக் காலமும் திருவாவடுதுறை ஆதீனத்துக்கும், சைவ சமயத்துக்கும், தமிழுக்கும் ஒரு பொற்காலம் என்றே சொல்லவேண்டும்.

புதிய குருமகா சன்னிதானத்தை தேர்வு செய்த பின்னரே, முக்தியடைந்த குருமகா சன்னிதானத்துக்கு சமாதி வைக்க வேண்டும் என்ற ஆதீன விதிப்படி, திருவாவடுதுறை ஆதீனத்துக்குள்பட்ட திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமி கோவிலின் நிர்வாகத்தை ஏற்றிருந்த மீனாட்சிசுந்தரம் தம்பிரான் அவர்கள், ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பண்டார சந்நிதிகள் என்ற புதிய பெயருடன் திருவாவடுதுறை ஆதீனத்தின் 24-வது குருமகா சன்னிதானமாகப் பட்டமேற்று இப்பணிகளைப் பொறுப்பேற்றுள்ளார். இவருடைய அருளாட்சியில் சைவமுந் தமிழும் மேன்மேலும் தழைத்தோங்குமென்று எதிர்பார்க்கலாம்.

### திருப்புகழ் முற்றோதல்



அருணகிரிநாதர் பாடல்கள் முற்றோதல் ஆத்மஜோதி இல்லத்தில் 10-11-2012 இல் ஆரம்பிக்கப்பெற்று திருக்கூட்டத்தினரால் முற்றோதப்பெற்று 10-11-2012 இல் பூர்த்தி செய்யப்பட்டது. வாரந்தோறும் பிரதிச் சனிக்கிழமைகளில் முற்றோதல் நிகழ்ந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

### நவராத்திரி வழிபாடு



நவராத்திரி வழிபாடு 10 நாட்களும் மிகவும் சிறப்பாக ஆத்மஜோதி இல்லத்தில் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பட்டது. தினமும் அபிராமி அந்தாதி சகலகலாவல்லிமாலை துர்க்கை அம்பாள் தோத்திரங்கள், லக்சுமிதேவி தோத்திரங்கள் திருமுறைகள் ஆகியன ஓதப்பெற்றன.

15-10-2012 தொடக்கம் 26-12-2012 வரை 10 நாட்களும் நவராத்திரி வழிபாடு சிறப்பாக நடைபெற்றன.

### பெரியார் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்களின் நினைவாக திருவாசகம் முற்றோதல்



05-11-2012 திங்கட்கிழமை இந்து சமயப் பேரவைப் பெரியார் அமரர் செல்லத்தம்பி மார்க்கண்டு அவர்களின் நினைவாக திருவாசகம் முற்றோதப்பட்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்த்தப்பெற்றது.

### சிவத்திரு சுப்பிரமுனிய சுவாமிகளின் குருபூசை



சிவத்திரு சுப்பிரமுனிய சுவாமிகளின் வருடாந்தக் குருபூசை 11-12-2012 ஞாயிற்றுக்கிழமை ஆத்மஜோதி இல்லத்தில் நடைபெற்றது. விசேட வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் இடம்பெற்றது.

### தீபாவளி வழிபாடு

12-11-2012 தீபாவளியை முனிட்டு விசேட வழிபாடுகளும் பிரார்த்தனையும் ஆத்மஜோதி இல்லத்தில் இடம்பெற்றது.

---

பணிவை கைவிடாமல் இருப்போமானால் ஆபத்துக்கள் எதுவும் நேராது

### கந்தசஷ்டி வழிபாடு



கந்தசஷ்டியை முன்னிட்டு 15-11-2012 தொடக்கம் 19-11-2012 வரை தினமும் வேற்பெருமானுக்கு அபிசேக ஆராதனையும் கந்தசஷ்டி கவசம், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா திருப்புகழ் போன்ற பனுவல்கள் திருக்கூட்டத்தினரால் பக்தியுடன் பாராயணம் செய்யப்பெற்றது.

### தாயுமானவர் பாடல் முற்றோதல்

தாயுமானவர் பாடல் முற்றோதல் 25-11-2012 01-12-2012 இருநாட்களும் திருக்கூட்டத்தினரால் முற்றோதப்பெற்றது. பக்திச்சுவையும் தத்துவச் செறிவும் உள்ள தாயுமானவர் பாடல்கள் திருக்கூட்டத்தினரால் பக்தியுடன் ஓதப்பட்டது.

### அகண்டநாம சிவநாம சங்கீர்த்தனம்

02-12-2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அகண்ட சிவ நாம சங்கீர்த்தனம் திருக்கூட்டத்தினரால் பக்தியுடன் நடத்தப்பெற்றது.

### நாவலர் பெருமான் குருபூசை



ஆறுமுகநாவலர் அவர்களின் வருடாந்தக் குருபூசை 05-12-2012 புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் திருமுறை பாராயணத்துடன் நடத்தப்பெற்றது. சிவபூசையும் நாவலர் பெருமானின் திருவுருவசிலைக்கு திருவடி வணக்கமும் நிகழ்தப் பெற்றது. பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் அவர்கள் நாவலர் பெருமானைப் பற்றிச் சிறப்புச் சொற்பொழி வாற்றினார்.

### சித்தர் பாடல்கள் முற்றோதல்

சித்தர்பாடல் முற்றோதல் 08/12, 15/12, 16/12, ஆகிய நாட்களில் திருக்கூட்டத்தினரால் முற்றோதப்பெற்றது.


### திருவெம்பாவை வழிபாடு

திருவெம்பாவையை முன்னிட்டு ஆத்மஜோதி இல்லத்தில்

இருந்து அருள்பாலிக்கும் சிவபெருமானுக்கு தினமும் அதிகாலையில் அபிசேக ஆராதனைகள் நடைபெற்றது. தொடர்ந்து வழமைபோல 10 நாட்களும் திருவாசகம் முற்றோதப்பெற்றது.

ஆருத்ரா தரிசனத்தன்று சிவபெருமானுக்கும் நடராசப் பெருமானுக்கும் சிறப்பான அபிசேக ஆராதனை நிகழ்த்தப்பெற்று வழிபாடு செய்யப்பட்டது.

### இரமண பகவானின் ஜெயந்தி வழிபாடு



29-12-2012 சனிக்கிழமை இரமண பகவானின் பிறந்ததினத்தை முன்னிட்டு காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை வழிபாடு நடத்தப்பெற்றது. இரமண பகவான் இயற்றிய அருணாசல அட்சர மணிமாலை படிக்கப்பெறறு உரை நிகழ்த்தப்பெற்றது. சிவபூசையைச் தொடர்ந்து மகேசுவர பூசை இடம்பெற்றது.

இரமண பகவானை பற்றி சைவதுரந்தரர் வி. கந்தவனம் ஆசிரியர் சு. சிவதாஸ் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

---

## ✷ கிருபானந்தவாரியாரின் அருள் மொழிகள்

✷ இந்தப் பிறவியில் நீ செய்யும் நன்மைகளை மறு பிறப்பில் அனுபவிப்பாய்.

✷ நீ உலகத்தில் இரு. ஆனால் உலகம் உன்னிடத்தில் இருக்கக்கூடாது.

✷ நாம் துன்பமின்றி இன்பமாக வாழ வேண்டுமானால் மற்றையோருக்கு மனம், வாக்கு, காயங்களால் துன்பம் செய்யக்கூடாது, நன்மையை செய்தல் வேண்டும்.

✷ எல்லாம் தெரிந்தவர்களும் உலகில் இல்லை. எதுவும் தெரியாதவர்களும் உலகில் இல்லை

✷ அடக்கமாகவும் பணிவாகவும் இருக்கவேண்டும். பணிவு மனிதனின் வாழ்வை உயர்த்தும்.

## அமரத்துவச் செய்திகள்

### கலாபூஷணம் பண்டிதர் சிறீரங்கம் அப்புத்துரை



யாழ்ப்பாணம் மயிலங்கூடலைப் பிறப்பிடமாகவும் குப்பிழானை வாழ்விடமாகவும் கொண்ட பண்டிதர் சிறீரங்கம் அப்புத்துரை அவர்கள் 10-10-2012 இல் கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

தமிழ் மொழியில் தீராத பற்றும் புலமையும் உள்ளவர். கடமை உணர்வுடன் அரும்பணி களைச் செய்தவர். 50க்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர் அவர் எழுதிய நூல்களில் ஈழத்துத் தமிழ் புலவர் வரலாறு பாகம்1, பாகம் 2, பாகம் 3 ஆகியன போற்றுதற்குரிய ஆவண நூலாகும்.

பண்டிதர் ஐயா அவர்கள் தன் துணைவியாருடன் 2008 ஆம் ஆண்டு கனடாவிற்கு வருகை தந்திருந்த பொழுது இந்து சமயப்பேரவை நடத்திய திருமுறை விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார். திருமுறை பற்றிய அரிய சொற்பொழிவையும் ஆற்றியிருந்தார்.

2011 ஆம் ஆண்டு மீண்டும் உறவிர்களின் அழைப்பை ஏற்று கனடாவிற்கு வருகை தந்த சைவப்பெரியார் அவர்கள் உடல்நலம் பாதிப்படைந்து சிகிச்சை பெற்றுச் சிகிச்சை பயன் அளிக்காமல் 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இந்துசமயப்பேரவையினரும் ஆத்மஜோதி ஆசிரியர் குழுவும் பிரார்த்திக்கின்றனர்.

### திருவாவடுதுறை ஆதீன 23வது குருமுதல்வர்



திருவாவடுதுறை ஆதீனக் குருமுதல்வர் அருள்திருசிவப்பிரகாச தேசிகபரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள் தன் 72 வது வயதில் 22-11-2012 வியாழக்கிழமை அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.

திருக்கயிலாயபரம்பரையைச் சேர்ந்த திருவாவடுதுறை ஆதீனம் புறச்சந்தான குரவர்களில் ஒருவரான உமாபதிச்சிவாச் சாரியாரின் குருசிஷ்ய பரம்பரையில் வந்த சித்தர் சிவப்பிரகாசர் அவர்கள் ஆதீனத்தின்

தாபகர் ஆவார்.

ஸ்ரீநமச்சிவாய மூர்த்திகள் ஆதீனத்தின் முதற்குரு முதல்வர் ஆவார். இவர் 16ஆம் நூற்றாண்டில் ஆதீனத்தை ஆரம்பித்தார் என்பது வரலாறு.

15வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகர் அவர்களின் காலத்தில் சைவத்தின் காவலன் நாவலர் பெருமானுக்கு நாவலர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அருள்திரு சிவப்பிரகாசதேசிகர் அவர்கள் சைவத்தை வளர்ப்பதில் தீவிர ஈடுபாடு உள்ளவர். இவர் 1982 ஆம் ஆண்டு இளவரசுப்பட்டத்துக்கு வந்தவுடன் 12-12-1982 இல் ஆதீனத்திங்கள் இதழான மெய்கண்டார்சஞ்சிகையை ஆரம்பித்தார்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 2012 வரை அவருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் சைவசித்தாந்தம் பெரும்வளர்ச்சி கண்டது. சைவசித்தாந்த நேர்முகப்பயிற்சி மையம் தொடங்கித் தமிழ்நாட்டில் மாவட்டங்கள் தோறும் வகுப்புக்களை நடத்தி 30,000க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு சைவசித்தாந்த இரத்தினம் பட்டம் அளித்திருக்கின்றார்கள். இவரின் அருளாட்சி காலத்தில் மட்டும் ஆதீனம் 205 நூல்களை 2006 ஆம் ஆண்டு வரை வெளியிட்டுள்ளனர்.

ஆதீனம் பரிபாலிக்கும் கோயில்கள் இருபது ஆகும். இவற்றில் ஒன்பது கோயில்கள் பாடல்பெற்ற தலங்கள் ஆகும். இவற்றில் மணிவாசகப் பெருமான் திருவடிதீட்சை பெற்ற திருப்பெருந்துறையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

திருவாவடுதுறை கிளை மடங்கள் காசிமுதல் கன்னியாகுமரி வரை நாடெங்கும் 130 மடங்கள் உள்ளன. இப்பொழுது நல்ல நிலையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் மடங்களே 69 ஆகும். நாடெங்கும் 50,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலம் ஆதீனத்திற்கு சொந்தமாயுள்ளது. பல இடங்களில் தேவார பாடசாலை ஆதீனத்தார் நடத்துகின்றனர். பல ஊர்களில் பல பாடசாலைகளையும் பல நூல்நிலையங்களையும் நடத்துகின்றனர். ஆண்டுதோறும் பல்வேறு நிறுவனங்கள் நூல்களை வெளியிடுவதற்கு பணஉதவி செய்துவருகின்றனர். பல சமுதாயப் பணிகள் 23 வது சந்நிதான மாகிய சிவப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் நிர்வாகத்தில் நிலைபெற்றுள்ளது.

கனடா இந்துசமயப் பேரவைத்திருக்கூட்டத்தினர் 2007ஆம் ஆண்டு 2010 ஆம் ஆண்டுகளில் இந்திய திருத்தலயாத்திரை செய்தபொழுது நாயன்மார்கள் திருமுறை பாடிய ஆலயங்களில்

பன்னிருதிருமுறைகளை முற்றோதி இருந்தனர். திருமந்திரத்தை திருவாவடுதுறை ஆலயத்தில் முற்றோதி இருந்தனர். சுவாமிகள் திருக்கூட்டத்தினரை ஆதீனத்திற்கு அழைத்து மதிய போசனம் கொடுத்து அருள் ஆசிகள் வழங்கினார்.

ஆதீன வெளியீடான சித்தாந்த சாகரம் திரு. கு. வைத்தியநாதன் எழுதிய விதியை வெல்வது எப்படி என்ற நூலை வெளியிடுவதற்கு கனடா இந்துசமயப்பேரவைக்கு அனுமதி வழங்கினார்.

சுவாமிகளின் ஆன்மா முக்தி பெற எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருளை வேண்டி வழிபடுவோமாக.

அன்னை பரமேஸ்வரி சரவணமுத்து



உரும்பிராயை பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை சிவமயச்செல்வி பரமேஸ்வரி சரவணமுத்து அவர்கள் 28-12-2012 திருவெம்பாவை இறுதிநாளான ஆருத்ரா தரிசனத்தன்று சிதம்பரநடராஜப் பெருமானின் திருப்பாதங் களை அடைந்தார்.

தன் வாழ்நாள் முழுவதும் பிரமச்சரியையாகவும் பூரண துறவியாகவும் வாழந்த அன்னை அவர்கள் மிகவும் இறைபக்தி மிகுந்தவர். நாயன்மார்கள் திருமுறைகளை பாடிய 275 திருமுறைத் தலங்களில் 250க்கும் மேற்பட்ட தலங்களை தரிசித்தவர். வடஇந்திய தலங்களை பலமுறை தரிசித்தவர். சிவதலங்களான பன்னிரு யோதிர்தலங்களை தரிசிக்கும் பேறுபெற்றவர்.

திருக்கயிலாயம் சென்று கயிலாயநாதரின் தரிசனம் பெற்றவர். பல வருடங்களாக திருக்கார்த்திகைக்கு திருவண்ணாமலையிலும் திருவெம்பாவைக்கு சிதம்பரத்திலும் தரிசனம் பெற்றவர். சிதம்பரம் புண்ணிய நாச்சியார் மடத்திலும் காசியில் குமரகுருபரசுவாமிகளின் குமாரசாமி மடத்திலும் தன் பெற்றோர்களின் நினைவாக அறைகளை தாபித்தவர். திருவண்ணாமலையில் திருவள்ளுவர் வீதியில் மாடிவீடு ஒன்றை வாங்கி யாத்திரிகர்களின் வசதிக்காக மடம் ஒன்றை தாபித்தவர்.

பல அரிய ஆன்மீக பணிகளைச் செய்த சிவமயச் செல்வி அவர்கள் இந்து சமயப்பேரவையின் ஆயுட்கால உறுப்பினர் ஆவார் பேரவையின் பல பணிகளுக்கு தன் தார்மீக ஆதரவைத் தந்தவர்.

பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளை தன் ஞானகுருவாகக் கொண்டவர்.

அமரத்துவம் அடைந்த அன்னை அவரின் ஆத்மா சாந்தியடையவும் அவரின் ஆசிகளை வேண்டியும் இந்துசமயப்பேரவையின் திருக்கூட்டத்தினர் பிரார்த்திக்கின்றனர்.

**யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபைத்தலைவர் தம்பியப்பா சண்முகலிங்கம் அவர்கள்**



சிவநெறிப் புரவலர் தம்பியப்பா சண்முகலிங்கம் அவர்கள் சுருவிலைப் பிறிப்பிடமாகவும் யாழப்பாணத்தை வாழ்விடமாகவும் கொண்டவர்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் முதுகெலும்பாக 40 வருடங்களுக்கு மேல்ப் பணியாற்றியவர். செயலாளர், பொருளாளர், தலைவர் போன்ற பதவிகளை அலங்கரித்தவர்.

சைவபரிபாலனசபைச் சொத்தாகிய சிதம்பரம் புண்ணிய நாச்சியார் மடத்தை புனர்நிர்மாணம் செய்து சிதம்பர தரிசனம் செய்யச் செல்லும் ஈழத்தமிழர்கள் உரிமையுடன் தங்குவதற்கு வழிவகுத்தவர்

நாவலர் பாரம்பரியத்தைக் கட்டிக்காத்து, நாவலர் வழியில் பணியாற்றிய சைவஆசாரசீலர் சைவப்பெரியார் சண்முகலிங்கம் ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய இந்துசமயப்பேரவையினர் பிரார்த்திக்கின்றனர். அமரர் அவர்கள் இந்துசமயப்பேரவைத் திருக்கூட்டத்தினர் மேற்கொண்ட 2010ஆம் ஆண்டு திருத்தல யாத்திரையில் பன்னிரு திருமுறைகளை முற்றோதிப் பூர்த்தி செய்த பின்னர் சிதம்பரத்தில் நடத்திய திருமுறை விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தவர்.

**சோதிச் சுவாமி பிரகாஸ் சின்மயானந்தா**

இவர் காங்கேசன்துறையைச் சேர்ந்த இராசரத்தினம் தம்பதிகளின் புதல்வராவர். சுவாமிகள் மலேசியாவில் பிறந்தவர். சட்டத்துறையில் படித்து ADVOCATE பட்டம் பெற்றவர்.

கருவிலே திருவுடைய சுவாமிகள் அவர்கள் தன் சிறுவயது தொடக்கம் இறைநாட்டம் உள்ளவர். பசனைப் பிரியன். இரமணபகவான் யோகர்சுவாமிகள் ஆகியோரை தன் ஆத்மீக குருமாராகக் கொண்டவர். ரிஜிகேசத்தில் சிவானந்தர் ஆச்சிரமத்தில்



12 வருடங்கள் தவவாழ்வு வாழ்ந்து குருமுதல்வர் சுவாமி சிவானந்தரிடம் தீட்சை பெற்று பிரகாஸ் சின்மயானந்தா என்ற தீட்சாநாமம் பெற்றவர்.

1995 ஆம் 1996 ஆம் ஆண்டுகளில் கனடாவில் வாழந்தவர். பேரவையின் தாபகர் ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளுடன் பல நிகழ்ச்சிகளில் 1995 ஆம் ஆண்டு கனடாவில் பங்குபற்றியவர்.

எந்த நேரமும் சிரித்த முகத்துடன் ஆனந்தபரவசத்துடன் வாழ்ந்த சுவாமிகள் தன் 93வது வயதில் யூலை மாதம் 6 ஆம் திகதி 2012 ஆம் ஆண்டு இறைவன் அடிசேர்ந்தார். சுவாமிகளின் ஆன்மா முத்திபெற எல்லாம் வல்ல சிவபெருமானின் ,திருவருள் வேண்டி பிரார்த்திப்போமாக.

## சட்டத்தரணி சிவப்பிரகாசம் சிறிதரன்



தாயகத்தில் மல்லாகத்தை பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சிறிதரன் அவர்கள் பிரபல சட்டத்தரணியாவார். பதில் நீதிபதியாகவும் கடமையாற்றியவர். சிறந்த சொற்பொழி வாளரான இவர் அரசியல்வாதியும் ஆவார். 1987 ஆம் ஆண்டு கனடாவிற்கு வருகை தந்த அமரர் அவர்கள் ஆன்மீகத்தில் ஈடுபாடு கொண்டு பல ஆன்மீகச் சொற்பொழிவுகளைச் செய்துள்ளார். சிறந்த சாயி பக்தரான இவர் சாயி சமிக்திகளில் பல உரைகளை பல வருடங்களாக நடத்தியுள்ளார்.

இந்து சமயப் பேரவையின் பல விழாக்களில் பயன் உள்ள பல சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். சிவதொண்டன் நிலையம் கனடாக்கிளைத் தலைவராக இருந்து பணியாற்றியவர். கடந்த வருடம் 2012 ஆம் அண்டு, டிசெம்பர் மாதம் 20ஆம்திகதி வியாழக்கிழமை தன் பூதவுடலை விட்டு இறைவனடி சேர்ந்தார்.

பல ஆற்றல்களை தன்அகத்தே கொண்ட பெரியார் அவர்களின் ஆத்மா சாந்திஅடைய வேண்டுமென இந்து சமயப் பேரவையினரும் ஆத்மஜோதி ஆசிரியர் குழுவும் பிரார்த்திக்கின்றனர்.

# ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச்செல்வர் சிவ முத்துலிங்கம்

- மனதை அலைய வைப்பது ஆசையாகும்.
- அலையும் மனத்தை கட்டுப்படுத்த விரும்பினால் சகல ஆசைகளையும் துறத்தல் வேண்டும்.
- தாரனை என்பது ஒரு குறிப்பிட்ட இலட்சியத்தில் மனத்தை செலுத்துதல் ஆகும்.
- உலகிலுள்ள எந்த உயிரையும் படைக்கும் சக்தி எமக்கு இல்லை. ஆகவே அதனை அழிக்கும் உரிமையும் எமக்கு இல்லை.
- கொல்லாமை தான் சிறந்த தர்மம். கொல்லாமை ஒன்றே சகல பாவங்களையும் போக்கி மேலான புண்ணியத்தைக் கொடுக்கும்.
- யாகம் செய்வதையும் தானம் செய்வதையும் தவம் செய்வதையும் விடக் கொல்லாமை மேன்மையானது.
- பிற உயிர்களைக் கொன்று அதன் உடலை உண்பது அருள் நெறிக்கும் சிறிதும் பொருந்தாது.
- திருட்டுத் தொழிலால் உண்டாகும் செல்வம் அளவிட முடியாதபடி பெருகுவது போல்காட்டி திடீரென்று இல்லாமல் போகும்.
- திருடுவதில் ஆசை வளர்ந்துவிட்டால் அதன்பயனாக ஓயாத துன்பங்கள் வந்து கொண்டே இருக்கும்.
- பணத்திற்கு ஆசைப்பட்டு களவு செய்பவர்கள் உண்பதற்கு சோறும் இல்லாமல் தெருத்தெருவாக அலைவார்கள்.
- கல்வியின் பயன் கடவுளைத் தொழுதலாகும்.

* மனிதப் பண்புகளை வளர்த்து ஒழுக்கமுள்ள வாழ்க்கை நடத்துவதற்கு உதவுகின்ற கல்வியே மக்களுக்கு அவசியம் தேவையாகும்.

* கல்வியின் முக்கிய நோக்கம் கசடற வாழ்க்கை நடத்துவதற்கான நல்லறிவுகளைக் கற்றுக் கொள்வதாகும்.

* ஒழுங்காக வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய அறிவுக்காக கற்பதே கல்வியாகும்.

* ஒருபோதும் கற்பவரை பழிக்கலாகாது.

* கற்ற அறிஞருடைய பூதஉடல் அழிந்தாலும் அவருடைய அறிவுஅழியாது.

* ஒருவன் ஒரு பிறப்பில் கற்றுக் கொள்ளும் நல்லறிவு அவனுக்கு இனிமேல் வரக்கூடிய பிறவிகளுக்கு பாதுகாப்பாக இருக்கும்.

* ஒருவனுக்கு அழியாததும் சிறப்புள்ளதுமான செல்வம் கல்விச்செல்வம் ஆகும்.

* கல்விதான் மனிதனுக்கு மேன்மை கொடுப்பது.

* உலகில் எல்லா நற்குணங்களும் பொருந்தியவனும் இல்லை. ஒரு நற்குணமாவது இல்லாதவனும் இல்லை.

* தீயகுணங்களைப் பற்றி நாம் பேசப்பேச அவைகள் மனதில் பதிந்துவிடும். அதனால் அவற்றைப் பற்றி பேசாதிருத்தல் நன்று.

* ஒவ்வொருவரையும் அவர்களுடைய செய்கைகளினால் குணமுள்ளவர்களோ கற்ற அறிவு உள்ளவர்களோ என அறிந்து கொள்ள முடியும்.

* நெடுநாட்கள் வாழ்ந்தவர்களும் இல்லை. நெடுநாட்கள் கெட்டவர்களும் இல்லை.

## வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க

அன்பானவர்களே,
உங்கள் வாழ்வின் அதியுயர் முதலீட்டை செவ்வனே செய்திட, உங்கள் சுமையை என் சுமையாகக் கருதி அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் செயற்படும் என்னை இன்றே அழையுங்கள்

***Guidance provided in related services include:***
***Mortgage, Inspection, Legal, Insurance.***



**Ratheesh Subramaniam**, B.Sc (Hons)
Sales Representative

Direct: **416.303.4005**
Bus: **416.321.6969**
Fax: **416.321.6963**
Email: ratheesh_maniam@hotmail.com

**Homelife/GTA Realty Inc., Brokerage,**
**1711 McCowan Road, # 206, Toronto, ON. M1S 3Y3**
"Independently Owned and Operated"
*Higher Standards Agents...Higher Results!...*


## வாசகர்களுக்கு
## அன்பான வேண்டுகோள்

1948ஆம் ஆண்டு துறவற ஞானி ஆத்மஜோதி யாராலும், இல்லற ஞானி ராமசச்சந்திராவினாலும் ஆரம்பிக்கப் பெற்ற ஆத்மஜோதிச் சஞ்சிகை பல சிரமங்களுக்கு மத்தியில் கனடாவில் வெளிவந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து வெளிவருவதற்கு ஆத்மஜோதி அன்பர்கள், ஆதரவாளர்கள், வாசகர்களிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்க்கின்றோம்.

ஆத்மீக நூல்களை வெளிவருவதற்கு உதவுவது ஞானதானமாகும். இவ் அரிய பணியில் பங்குபற்றி மேன்மை உறுவீர்களாக.

- ஆசிரியர்குழு

**தொடர்புகளுக்கு: 416-724-6240**

# முருகன் புத்தகசாலை



இலங்கை, இந்தியாவில் இருந்து
நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள்
இறக்குமதி செய்து விற்பனை
செய்கிறோம்

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**WESTERN UNION**
**MONEY TRANSFER**

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 109**
**TEL: 416-321-0285**

# விவேகா அச்சகம்

**VIVEKA** *Printers*

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

**Book Publishing, Printing, Binding**
**Graphic Designs, Web Designs, Digital Colour Copies,**
**Digital Black & White Copies**

**1911 KENNEDY ROAD, UNIT 109-110**
**TEL: 416-269-1994**
**416-807-7468**